பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 6.00

# வலம்புரி

VALAMPURI

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | சித்திரை 31 | புதன்கிழமை (14-05-2003) | தொலைபேசி 2223378 | ஒலி 146

ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

# ஜப்பான் மாநாட்டை ஒத்திவைக்குமாறு புலிகள் கோருவர்

(நமது நிருபர்)

**யூன் மாதம் 10-ம் திகதி டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் மாநாட்டை ஒத்திவைக்குமாறு கோருவதென விடுதலைப்புலிகள் தீர்மானித்துள்ளனர்.**

**தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.**

அடுத்த மாதம் டோக்கியோவில் நடைபெறவுள்ள இலங்கைக்கான உதவி வழங்கும் மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குகொள்வதா? இல்லையா? என்ற முடிவை இன்று ஜப்பானுக்கு அறிவிக்க வேண்டிய நிலையில் அம்மாநாட்டை ஒத்திவைக்குமாறு விடுதலைப்புலிகள் இன்று ஜப்பானிடம் கோரிக்கைவிடுப்பார்கள் என்று தெரியவருகிறது.

ஒஸ்லோவில் நடைபெற்ற இலங்கைக்கான நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதின் பிரகாரம் இலங்கைக்கு ஒதுக்கப்பட்ட 70மில்லியன் அமெரிக்க டொலர்கள் இன்னமும் வழங்கப்படவில்லை. இதற்கான தனியான நிதியமும் ஆரம்பிக்கப்படாத நிலையில் யுத்தத்தினால் அழிவுற்ற வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் கட்டுமானத்திற்கான அமைப்பை உருவாக்குவதற்கு இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாமையால் அத்தகைய நடவடிக்கை எடுக்கப்படும்வரை டோக்கியோ மாநாட்டை ஒத்திவைக்குமாறு விடுதலைப்புலிகள் கோரவுள்ளனர்.

இதேவேளை விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களை கிளிநொச்சியில் நேற்று சந்தித்த தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் விடுதலைப்புலிகளின் ஒத்திவைக்கக்கோரும் கோரிக்கைக்கு மேலும் வலுவூட்ட கூடியதாக ஜப்பானிடமும், இலங்கை அரசிடமும் இக் கோரிக்கையை வலியுறுத்தியுள்ளனர்.

இக் கோரிக்கையை தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் வலியுறுத்துவதற்கு முன்பதாக இன்னும் இரண்டொரு தினங்களில் செய்தியாளர் மாநாட்டைக் கூட்டி அதன் மூலம் பிரதமரிடமும் ஜப்பான் தூதுவரிடமும் மகாநாட்டை ஒத்திவைக்குமாறு வலியுறுத்தி கூறவுள்ளார்.

இது இவ்வாறிருக்க நிதியுதவி தொடர்பான முன்னைய மாநாடுகளின் தீர்மானங்கள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் டோக்கியோ மாநாட்டில் விடுதலைப்புலிகள் பங்குபற்றுவதால் எதுவும் நடந்துவிடப் போவதில்லை என அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர். (ம)

# ரெலோ மத்திய குழு உறுப்பினர் வவுனியாவில் சுட்டுக் கொலை

(கொழும்பு)

தமிழீழ விடுதலை இயக்கத்தின மத்திய குழு உறுப்பினர் வேலாயுதம் சிவரமேஸ நேற்றுக் காலை 9 மணியளவில் இனம் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

வவுனியா கற்குழியில் உள்ள ரெலோ அலுவலகத்திற்கு முன்னால் இச் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கற்குழி வீதியில் நிறுத்தப்பட்டிருந்த தனது வாகனத்தைக் கழுவிக் கொண்டிருக்கும் வேளையில் அவ்வழியால் நடந்து வந்த ஒருவர் மேற்படி உறுப்பினரை கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளார்.

இவரது கொலைக்கு 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கி பயன்படுத்தப்பட்டிருப்பதாக வவுனியா மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் எம்டபிள்யு. தர்மரெட்ணா தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் வவுனியா மாவட்டத்தின் தமிழ்க் கட்சி உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டது இதுவே முதற் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. கொலை செய்யப்பட்ட சிவரமேஸ் மீசாலையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## முன்னாள் வரதர் அணி உறுப்பினர் நேற்று வெட்டிக் கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஊரணிப் பகுதியில் முன்னாள் ஈ.பி.ஆர்.எல்.எப் (வரதர் அணி) உறுப்பினர் ஒருவர் வெட்டு காயங்களுடன் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு நாவலடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான சிவராசா தேவராசா (வயது 33) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவர் ஆவார்.

இவரது சடலம் ஊரணி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் இருந்து பலமான வெட்டுக்காயங்களுடனும் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மேற்படி நபரின் மைத்துனர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்த இவர் அண்மையில் பிணையில் விடுதலை ஆகியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## புளொட் உறுப்பினர்கள் மீது மட்டக்களப்பில் கைக்குண்டு வீச்சு

## எட்டுப்பேர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் நேற்று மாலை 7மணியளவில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் 8புளொட் உறுப்பினர்கள் காயமடைந்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரில் உள்ள புளொட் அலுவலகம் முன்பாக உள்ள மைதானத்தில் கரபந்தாட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது இனந் தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.

இச் சம்பவத்தில் காயமடைந்த புளொட் உறுப்பினர்கள் இருவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மட்டக்களப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

படுகாயமடைந்த புளொட் உறுப்பினர்கள் அனைவரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (த)

## பாலசிங்கத்திற்கு நெஞ்சுநோ லண்டன் மருத்துவமனையில்

(லண்டன்)

விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நெஞ்சுநோ காரணமாக லண்டன் வைத்தியசாலை ஒன்றில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் வன்னிக்கு வருகை தந்திருந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம் சுகவீனம் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை லண்டன் சென்றிருந்தார்.

லண்டன் சென்ற அவர் நெஞ்சுநோ காரணமாக லண்டன் வைத்தியசாலை ஒன்றில் நேற்று அனுமதிக்கப்பட்டுள்ளார். சிறுநீரகத்திலும் சிறு சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தபோதிலும் அது கடுமையானதல்ல எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ந)

# யாழ்ப்பாணத்தில் சார்ஸ் நோய்?

(யாழ்ப்பாணம்)

சார்ஸ் நோய்க்கான அறிகுறிகளுடன் நோயாளி ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதை அடுத்து நேற்று மாலை யாழ். நகரில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

(10ம் பக்கம் பார்க்க)



கூட்டமைப்புடனான சந்திப்பு நேற்று வன்னியில் நடைபெற்றபோது கூட்டணி எம்.பி.சம்பந்தனை தமிழ்ச்செல்வன் வரவேற்கிறார்.

# அதிகாரத்துடன் கூடிய கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் இருக்கவேண்டும்

## புலிகள் வலியுறுத்தியதாக சம்பந்தன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடைபெற்று வரும் சமாதான முயற்சிகள் வெற்றி பெறுவதற்கு தங்களது முழு ஒத்துழைப்பையும் வழங்கப்போவதாகவும் விடுதலைப்புலிகள் உறுதியளித்துள்ளார்கள் என்று திருமலை மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் முக்கியஸ்தர்களை சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவித்தபோதே இரா. சம்பந்தன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்ற இக் கலந்துரையாடலின் பின்னர் இரா. சம்பந்தன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை சந்தித்து கலந்துரையாடினோம்.

யுத்தத்தினால் சீரழிந்துபோயுள்ள வடக்குக் கிழக்கு பிரதேசத்தை கட்டி எழுப்புவதற்கும் வடக்கு கிழக்குப் பகுதிகளில் இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கும் நிர்வாக ரீதியாக நிதிரீதியாக தேவையான தொழில்களில் ஈடுபடுவதற்கும் போதிய அதிகாரங்களுடன் கூடிய கட்டமைப்பு அவசியம் இருக்கவேண்டும் என்பதில் விடுதலைப்புலிகள் மிகவும் உறுதியாக உள்ளனர்.

அத்தியாவசிய மனிதாபிமான புனர்வாழ்வு வேலைகளுக்காக அமைக்கப்படுகின்ற உப குழு தனது கடமைகளை நிறைவேற்றக் கூடிய நிலையில் இல்லை. வடக்கு கிழக்குக்கான புனர்வாழ்விற்காக நிதியொதுக்கப்பட்டபோதிலும் அது

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அபி.லொத்தர் சபை கைமாற்ற விவகாரம்

# பேச்சைக் குழப்பும் உள்நோக்கம் கொண்டது

## புதிய ஜன நாயகக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கமும் ஜனாதிபதி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணியும் தேசிய இனப் பிரச்சினையின் ஆபத்து மிக்க சாராம்சத்தையும் அது தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும உணர்ந்து கொள்ளாது தத்தமது உள்நோக்கங்கள் கொண்ட நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதிலேயே அக்கறை காட்டிவருகின்றனர். அதன் விளைவானதே விடுதலைப் புலிகள் இயக்கம் பேச்சுவார்த்தையில் இருந்து தற்காலிகமாகவே விலகிக் கொள்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட சூழலாகும்.

இவ்வாறு புதிய ஜனநாயகக் கட்சியின் மத்தியகுழு தற்போதைய அரசியல் நெருக்கடி பற்றி ஆராய்ந்த பின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளர் சி.கா.செந்திவேல் மத்திய குழு சார்பாக வெளியிட்டுள்ள மேற்படி அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது,

நமது நாட்டினதும் சகல தேசிய இனங்களினதும் வாழ்வு.வளம், ஐக்கியம் அபிவிருத்தி அடிப்படையில் தீர்வு காணப்பட வேண்டிய தேசிய இனப்பிரச்சினையானது யுத்தம் என்ற நிலையை அடைந்து அழிவுகளைத் தேடிக் கொண்டது மல்லாது இன்று அந்நிய ஆதிக்க சக்திகளின் விருப்பு வெறுப்புகளோடு இணைக்கப்பட்டு சிக்கலாக்கப்பட்டுள்ள சூழலிலேயே காணப் படுகின்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அராசாங்கம் யுத்த நிறுத்தம்,பேச்சுவார்த்தை சமாதானம் என்ற பெயரில் காலத்தை இழுத்தடித்து தனியார்மயம் தாராளமயம் உலக மயமாதல் என்பனவற்றை வேகமாக முன்னெடுத்து நிறைவேற்றி வருகின்றது.

இது அமெரிக்காவின் எண்ணங்களையும் விருப்பங்களையும் நிறைவேற்றுவதுமாகவே காணப் படுகிறது. அதேவேளை,புலிகள் இயக்கத்துடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின் ஆறு கட்டப் பேச்சுவார்த்தைகளில் இணங்கப் பட்ட விடயங்களைக் கிடப்பில் போட்டு காலத்தை இழுத்தடித்தும் வந்துள்ளது.

அதனை அவதானித்தே விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து தற்காலிகமாக விலகும் முடிவை எடுப்பதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். இதனை அரசாங்கம் உணர்ந்து உரிய மாற்று நடவடிக்கைகளில் இறங்கி விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் மீண்டும் கலந்து கொள்வதற்கான சூழலை உருவாக்கிக் கொள்ளல் வேண்டும்.

அதை விடுத்து பேச்சுவார்த்தை, சமாதானம் என்ற போர்வையில் தங்களதும் அமெரிக்காவினதும் உள்நோக்கங்களை முன்னெடுக்க முனைவதால் நாடு மீண்டும் யுத்த அபாயத்திற்குள் சென்றடையவே செய்யும் என்பதை எமது கட்சி சுட்டிக் காட்டி எச்சரிக்கின்றது.

அதேவேளை,ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா தனது நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி லொத்தர் சபை விவகாரத்தைக் கையேற்றதாக கையில் எடுத்திருப்பது சாராம்சத்தில் பேச்சுவார்த்தைக்கு முட்டுக் கட்டையிட்டு குழப்பும் உள் நோக்கம் கொண்டதாகும்.

இவ் விடயத்தில் தனியார் மயத்தைத் தடுக்கவே லொத்தர் சபை விவகாரத்தைக் கையேற்ற தாக கூறப்படும் நியாயம் தனியார் மயம் பற்றி ஜனாதிபதியும் பொது ஜன ஐக்கிய முன்னணியும் ஏற்கனவே கொண்டிருந்த தனியார் மயக் கொள்கையுடன் முரண்பாடுடைய தாகும்.

எனவே அத்தகைய நியாயத்தை விடவும் லொத்தர் சபை விவகாரத்தைக் கையில் எடுத்து அது போன்ற நடவடிக்கைகள் மூலம் அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவித்து பேச்சுவார்த்தையைக் குழப்பி மீண்டும் யுத்த சூழலை ஏற்படுத்தும் உள்நோக்கமே முனைப்புடையதாகக் காணப்படுகிறது.

ஆதலால் அரசாங்கமும் ஜனாதிபதியும் தங்களதும் தங்களுக்குப் பின்னால் இருந்து வரும் அந்நிய சக்திகளின்தும் உள்நோக்கங்களை நிறைவேற்றி கொள்ளும் வகையிலான நிகழ்ச்சி நிரலைக் கைவிட்டு நாட்டுக்கும் மக்களுக்கும் விடிவும் விமோசனமும் தரக்கூடிய தூர நோக்கிலான வழியில் சிந்தித்து செயல்பட வேண்டும் அதற்கு உடனடியாகச் செய்யப்பட வேண்டியது பேச்சு வார்த்தையில் விடுதலைப் புலிகளைப் பங்கு கொள்ள வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுப்பதும் நியாயமான அரசியல் தீர்வு காணப்படுவதுமாகும் காலத்தை இழுத்தடித்துச் செல்லாது தீர்வு காணப்படுவதிலேயே எதிர்காலம் தங்கியுள்ளது என்பதையே எமது கட்சி சுட்டிக் காட்டுகிறது.

ஜனாதிபதி லொத்தர் சபை விவகாரத்தைக் கையில் எடுத்துக் கொண்டதன் மூலம் பேச்சுவார்த்தையை பின்னுக்குத்தள்ளப்படக் கூடிய சூழலை ஏற்படுத்தியுள்ளார். எனவே இவ்விரு தரப்பினரும் தத்தமது சொந்தக் கட்சி அரசியல் பொருளாதார உள் நோக்கங்களை முன்தள்ளி பேச்சுவார்த்தையைக் குழப்பி மீண்டும் யுத்தம் மூளக்கூடிய அபாய நிலைமைகளை தோற்றுவிப்பதை தவிர்க்குமாறும அதற் குரிய மாற்று நடவடிக்கைகளை எடுக்குமாறும் எமது புதிய ஜன நாயக் கட்சி அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கின்றது என்றுள்ளது. (உ)

# எத்தகைய நெருக்கடிகளையும் எதிர் கொள்ள அரசு தயார்

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(கொழும்பு)

அமைச்சுப் பொறுப்புக்களை அபகரிக்கும் நடவடிக்கைகளுக்கு முன்னர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பிரதமருடன் கலந்தாலோசிக்க வேண்டும் என்பது அரசின் நிலைப்பாடு என அரசியல் விவசார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் கொழும்பில் நேற்று நடை பெற்ற செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த பீரிஸ்;

ஜனாதிபதி ஒரு கட்சியினைச் சேர்ந்தவராகவும் அமைச்சரவை மாற்றொரு கட்சியினால் உருவானதாகவும் இருக்கும் பட்சத்தில் பிரதமரின் கருத்தைக் கேட்டறிவது கட்டாயமானது.இது அரசியல் யாப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபை தொடர்பாக தற்போது எழுந்துள்ள பிரச்சினைகளுக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண பிரதமர் தயாராகவுள்ளார் இதற்கு ஜனாதிபதியும் ஆதரவு வழங்க வேண்டும்.

அபிவிருத்தி லொத்தர் சபை, கொள்கைத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் கீழ் உருவாக்கப் பட்டது.

1994-ம் ஆண்டு பொது ஜன ஐக்கிய முன்னணி அரசு ஆட்சியேற்ற போது இச் சபை நிதியமைச்சின் கீழ்க் கொண்டு வரப்பட்டது. ஜனாதிபதி அப்போது மேற்படி சபையை நிதியமைச்சராகவே பொறுப்பேற்றார் என்றார்.

இவ் அபிவிருத்தி லொத்தர் சபை குறித்து ஜனாதிபதி அமைச்சர் மிலிந்த மொறகொடவுக்கு அனுப்பிய கடிதத்தின் உள்ளடக்கம் பற்றி அங்கு பிரஸ்தாபித்த அமைச்சர்;

இந்தச் சபை பொருளாதார மறுசீரமைப்பு அமைச்சின் கீழக் கொண்டு வந்தது தவறுதலான விடயம் என ஜனாதிபதி,அமைச்சர் மிலிந்தவுக்கு அனுப்பி வைத்த கடிதத்தில் குறிப் பிட்டுள்ளார்.

இந்தத் தீர்மானத்தை எடுப்பதற்கு அவருக்கு 17 மாதங்கள் சென்றது ஏன்?எவ்வாறேனும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையே தற்போது தோன்றியுள்ள நெருக்கடிகள் சமாதான முயற்சிகளின் முன்னேற்றத்தைப் பாதிக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

இது சம்பந்தப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்காக அரசாங்க அமைச்சரும் அரசாங்கத் தொடர்பாடல் அமைச்சருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கரும் சட்டமா அதிபரின் ஆலோசனையைக் கோரியுள்ளனர்.

இதனால் அபிவிருத்தி லொத்தர் சபையின் சட்டரீதியான அந்தஸ்தில் மாற்றம் ஏதும் நிகழவில்லை.இருந்த போதும் தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கம் எத்தகைய நெருக்கடிகளையும் எதிர் கொள்ளத் தயாராகவுள்ளது.

பாராளுமன்றம் கலைக்கப்படுமானால் தேர்தல் ஒன்றையும் எதிர் கொள்ளத் தயாரென அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

## அடையாள அணிவகுப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் கடந்த மாதம் 15ஆம் திகதி இராணுவ புலனாய்வாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு நேற்று மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் நடைபெற்றது

இந்த அடையாள அணிவகுப்பில் துறைநீலவணையைச் சேர்ந்த கணேசமூர்த்தி பகீரதன் மண்டூரைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை துஷ்யந்தன் ஆகியோர் மேற்படி படுகொலைச் சம்பவத்தை நேரில் பார்த்தவரான அப்துல் ரஹீம் வஹாப் என்பவரால் அடையாளம் காட்டப்பட்டனர். (த)

## சீருடைமுத்திரை விநியோகம்

(பளை)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரிவை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டு யாழ். மாவட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கான சீருடை முத்திரை விநியோகம் நாளை வியாழக் கிழமை இல.159 மானிப்பாய் வீதி யாழ்ப்பாணத்தில்(முன்பு பிரதேச செயலகம் இயங்கிய கட்டடம்)விநியோகிக்கப்படவுள்ளது.

(உ)





உங்கள்

வலம்புரியின்

வாரமலர்

சங்குநாதம்

* எரிக்சோலின் யாழ்.விஜயம்.
* நம்பியாரின் அறிக்கை என்ன சொன்னது!
* சழராஜா எல்லாளன் தொடர்கதை.
* ஆலடி மாநாடு

(நகைச்சுவையுடன் கூடிய அதிரடி)

இன்னும் பற்பல...

12 05 2003

வாசிக்கத் தவறாதீர்கள்

திங்கள் வைகறையில் உங்கள்

உள்ளங்களில் ஒலிப்பது

19 05 2003

சங்குநாதம்

# ஐ.நா.சபையின் மிகப் பெரிய இராஜதந்திரி யசூசி அகாஷி

**மே 9 ஆந் திகதி வெளியான புறொண்ட்லைன் சஞ்சிகையில் வெளியான யப்பான் தூதுவர் அகாஷியுடன் பத்திரிகையாளர் என். ராம் நடத்திய பேட்டியின் சாராம்சம் இங்கு தமிழில் தரப்படுகின்றது. (ஆ-ர்)**

(நேற்றைய தொடர்ச்சி)

**ராம்:-** விடுதலைப்புலிகளினால் நியமிக்கப்பட்ட விசேட குழுவினர் பல நாடுகளுக்கும் சென்று சமஷ்டியின் அமைப்புப் பற்றி ஆராய்ந்து வருகின்றார்கள் அவற்றுள் எவை மிக முக்கியம் என நீங்கள் கருதுகின்றீர்கள்?


2000ம் ஆண்டில் உருவாகிய தீர்மானங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன. இதில் நான் குறிப்பிடவிரும்புவது என்னவென்றால் பல சரத்துக்கள் இந்தியாவின் அரசியல் சட்டதிட்டங்களுடன் ஒத்து இருக்கின்றன. சில விடயங்களில் நல்ல மாற்றமும் காணப்படுகின்றன. உதாரணமாக தேசாதிபதி பிரதம மந்திரியை வெளியேற்ற இயலாது. ஆனால் இந்திய ஜனாதிபதிக்கு இந்த உரிமை இருக்கின்றது. இத்தகைய தீர்மானத்தையும் தல் வேண்டும்.

**அகாஷி:-** அரசாங்க உத்தியோகத்தர்களுக்குமா?(இடையில் குறுக்கிட்டு)

**ராம்:-** அது மாத்திரமல்ல பொலிஸ் சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கும் அமைத்தல் வேண்டும். மேலும் பிள்ளைகளினுடைய உரிமைகள், கடமைகள், மனோநிலைகள் பற்றி விசேட பயிற்சி அளிக்க யுனிசெப்பின் உதவியுடன் திட்டமொன்றை அமைக்க வேண்டும். மேலும் உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களுக்கும்

ஏனென்றால் அதன் உயர் செல்வாக்கும் இலங்கைக்கு அண்மையில் இருப்பதும், பரந்த கலாசாரமும் பல நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளும் இந்தியாவிடம் உண்டு. அதேவேளை இரு நாட்டிலும் பாராளுமன்ற பலம் உண்டு. இரண்டுக்கும் ஜனாதிபதிகள் உண்டு. அரசியல் அமைப்பு சட்டம் கூட இரு நாட்டிலும் ஏறக்குறைய ஒத்திருக்கின்றது. அப்படி இருந்தும் அரசியல் சட்ட பூர்வமான காரணங்கள் ஆகியவைகளினால் தாங்கள் விரும்பும் விடயங்களை செயற்படுத்த முடியாமல் இருக்கிறது. நான் ஒரு அரசியல் ஆய்வாளர் என்ற வகையில் கூற விரும்புகிறேன். இந்தியா விடுதலைப்புலிகளுடன் சமமாக மேசையில் இருந்து பேச மாட்டாது. இது அரசியல் சார்பாக சட்டபூர்வமாகச் செய்ய முடியாத ஒன்றாகும். இது நடைமுறை சாத்தியமன்று தெளிவாக கூற

இங்கிலாந்து ஆகிய நாடுகள் புலிகளை தடைசெய்திருந்தும் கூட டோக்கியோ மாநாட்டில் புலிகளுடன் அவர்களும் பங்கு பற்றுகிறார்கள். மேலும் நீர் குறிப்பிட்டீர் இந்தியா இலங்கைக்கு சமாதான திட்டங்கள் உட்பட தனது செல்வாக்கைப் பிரயோகித்த வருகிறது என்று. இந்தியா இப்



பிரதேசத்தில் மற்றைய நாடுகளிலும் பார்க்க மிகுந்த அனுபவம் வாய்ந்த ஒன்றாகும். ஒரு சில அனுபவங்கள்

## அகாஷியும் சதீஸ் நம்பியாரும்

**அகாஷி:-** சமஷ்டியை பற்றி குறிப்பிடுகையில் சுவிசும்



ஜேர்மனியும் குறிப்பிடத்தக்கவைகளாகும். மேலும் இந் நாடுகளுக்கும் முன்பும் ஒரு முறை சென்று இருக்கிறார்கள். கனடாவின் முன்னைய பிரதம மந்திரியும் பக்கோணில் நடைபெற்றுள்ள மாநாட்டில் கலந்துகொண்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**ராம்:-** இத் தொடர்பில் முன்னைய அரசாங்கத்தின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கா மிகவும் விரும்பத்தக்க சில தீர்மானங்களை முன்வைத்திருந்தார். அவற்றுள் ஒரு தீர்மானம் 1997-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தயாரிக்கப்பட்ட சட்ட வாக்கங்களில் சீர்திருத்தங்கள் மேற்கொள்வதாகும். இத் தீர்மானத்தை ஒத்த தீர்மானங்கள் சில உத்தியோக பூர்வமாக 2000ம் ஆண்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தபோது ஐக்கிய தேசியக் கட்சியும் விடுதலைப்புலிகளும் நிராகரித்தனர். பொதுஜன ஐக்கிய முன்னணி இதே தீர்மானங்களை மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தது.

**அகாஷி:-** அன்று வகுத்த அத் தீர்மானங்களின் பின்னணியில் பேராசிரியர் ஜி.எல். பீரிசும் இருந்திருப்பாரோ என நான் ஆச்சரியப்படுவதில் தவறில்லையே.

**ராம்:-** இவ்விடயத்தில் ஜனாதிபதி, தமிழர் கூட்டணி நீலன் திருச்செல்வம் மற்றும் பலர் பங்களித்துள்ளார்கள் ஆனால் அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் இவ்விடயங்களை நன்றாக அலசி ஆராய்ந்து நல்லனவற்றைச் சேர்த்து அல்லாதவைகளை நீக்கி பூரண வடிவம் கொடுத்தார். இத் தீர்மானம் பாராளுமன்றம் ஏறாவிட்டாலும் பிரசுரித்து வெளியிடப்பட்டது. ஆனால் கூட விடுதலைப்புலிகள் நிராகரித்தற்குரிய காரணம் என்ன என நீங்கள் நினைக்கின்றீர்கள்?

**அகாஷி:-** அன்ரன் பாலசிங்கம் தனது பத்திரிகையாளர் மாநாட்டின் இறுதியில் பேசும் போது குறிப்பிட்டார். ''உள்ளூர் ஆட்சி மன்றங்களில் நேர்மையும் நீதியுமான தெரிவுகள் நடக்க உதவுவோம்'' இவ் வாக்கியத்தை இக் கட்டத்தில் ஏன் அவர் குறிப்பிட்டார் என்பது எனக்கு ஒரு சந்தேகத்தை கொடுக்கிறது. ஆனால் விடுதலைப்புலிகள் இதய சித்தியுடன் இவ் விடயத்தில் ஜனநாயகக் கொள்கைகளுக்கமைய நடந்துகொள்வார்களேயானால்

**தமிழில் மூர்த்தி**

இது மிகவும் ஊக்குவிக்கக் கூடிய அல்லது உற்சாகம் ஊட்டக்கூடிய தீர்மானங்கள் ஆகும் என நான் எண்ணுகின்றேன்.

**ராம்:-** முன்பொருகால் விடுதலைப்புலிகள் அரசியல் முன்னணி ஒன்றை அமைத்தார்கள். ஆனால் அது நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்காது என்பதை உணர்ந்த அவர்கள் அதை ரத்துச் செய்தார்கள்.

**அகாஷி:-** இது சம்பந்தமாக ஜப்பானிய வெளிவிவகார அமைச்சரின் உயர்மட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெளிவு உரை ஒன்றை கூறினார். அவைகள் அந்தப் பழைய கட்சியைப் பாவிக்க மாட்டார்கள். ஆனால் இன்று வரை விடுதலைப்புலிகள் ஒரு விடுதலை இயக்கமாக இருந்து வருகிறார்கள். ஆனால் அது ஒரு கட்சி அல்ல. ஆகையினால் உள்ளூராட்சித் தேர்தல்களில் பங்கெடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஆனால் தெரிவு ஒன்று வந்தால் உதவி புரிவார்கள்.

**ராம்:-** மற்றைய விடயங்களில் முக்கியமானதென்று தீர்மானிக்கப்பட்டதும் திட்டவட்டமான தீர்மானங்களை கொண்டதுமான பாதையானது மூன்று தீர்மானங்களை கொண்டுள்ளது.

1) மனிதாபிமான கொள்கைகளுக்கும் உரிமைகளுக்குமான சட்ட வரைபு ஒன்றை இயற்றுவது.
2) மனிதாபிமான உரிமைகள் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்றை விடுதலைப்புலிகளின் அங்கத்தவர்களுக்கும் அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்குமான அமைத்

அகதிகளுக்கும் யூ.என்.எச்.சி.ஆரின் உதவியுடன் பயிற்சிகள் அளிப்பதற்கு திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். சர்வதேச மனிதாபிமான சட்ட விளக்கங்களை மேற்படி குறிப்பிட்டுள்ளோர்க்கும்

## ஒன்றாகப் பணியாற்றியவர்கள்

கொடுப்பதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்த வேண்டும். மூன்றாவது தீர்மானம் ஸ்ரீலங்கா மனித உரிமைகள் ஆணைக்குழுவை மேலும் பலப்படுத்தி நாடு பூராவும் அவர்களது கடமைகளை திறம்படச் செயலாற்ற வழிகள் மேற்கொள்ள வேண்டும். என நான் கருதுவது சரியா?

**அகாஷி:-** ஆம் நீங்கள் குறிப்பிட்ட மூன்றாவது விடயத்தில் ஸ்ரீலங்கா மனித உரிமை ஆணைக்குழு திறம்பட இயங்கவில்லை என நான் கேள்விப்பட்டேன். அதை திறம்பட இயக்குவதற்கு ஆலோசனை வழங்க வேண்டும்.

**ராம்:-** மேலும் மனித உரிமைகள் ஆணைக்குழு திறம்படச் செயலாற்றுவதற்குரிய ஆலோசனைகளை கூறப்படல் வேண்டும். இதனை எப்படிச் செய்யமுடியும்?

**அகாஷி:-** ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகரின் உதவியுடனும் ஆலோசனையுடனும் திறம்பட இயங்கவைக்கலாம்.

**ராம்:-** இலங்கை இன விவகாரத்தில் இந்தியா முக்கிய இடத்தில் இருக்கின்றது.

முடியாவிட்டாலும் இருவருக்கும் இடையில் பலவிதமான கருத்து வேற்றுமைகளும் மறக்க முடியாத சிக்கல்களும் இருக்கின்றன. இதற்கமைய நோக்குமிடத்து யூன் 9,10 திகதிகளில் டோக்கியோவில் நடைபெறும் நிதி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இந்தியா பங்குபற்றாது என்பது சாத்தியப்படுமா?

**அகாஷி:-** உம்மை நான் வாழ்த்துகிறேன். நீர்தான் சகல விடயங்களையும் தெளிவாக உணர்ந்த பத்திரிகையாளன் என்று கூறினால் அது சாலப் பொருந்தும்.

**ராம்:-** ஆனால் இந்தியா இரண்டு நாடுகளுக்குமிடையே பணம், தொழில்நுட்ப உதவிகளை நீண்ட காலமாக கடன் அடிப்படையில் செய்து வருகிறது. 100மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகை இரு நாடுகளுக்குமிடையிலான வியாபாரத்தில் இருக்கின்றன.

**அகாஷி:-** நீங்கள் சொல்வது யாவும் வாஸ்தவம்தான். ஆனால் நீங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டியது யாதெனில் அமெரிக்கா வருத்தத்திற்குரியவைதான். ஆனால் எனது எண்ணப்படி இந்தியா மனம் உவந்து தனது நீண்ட அனுபவங்களை இலங்கை அரசாங்கத்தின் விடயத்தில் மற்றைய நாடுகளுடன் பகர்ந்து கொள்வது நல்லது. மேலும் ஸ்ரீலங்காவிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான கசப்புகளையும் பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு இந்தியாவின் பங்கு மிக முக்கியமானதென இரு சாராரும் பூரணமாக ஒத்துக்கொள்கிறார்கள். விடுதலைப்புலிகள் திரும்பத் திரும்ப குறிப்பிட்டு வருகிறார்கள். இந்தியாவின் அபார செல்வாக்கைப் பாவித்து சமாதானத் திட்டத்தில் நல்ல ஒரு முடிவை ஏற்படுத்தலாம் என்று கூறியுள்ளார்கள். எது எவ்வாறாக இருந்தாலும் இந்தியா இவ் விடயத்தில் வளைந்து கொடுத்து ஸ்ரீலங்காவின் சமாதானத் திட்டத்தில் முக்கிய பங்கெடுத்து வெற்றியை நிலைநாட்ட வேண்டும் என்பதே யாபேரினதும் விருப்பமாகும்.

(முற்றும்.)

**தலதா மாளிகை குண்டுவெடிப்பு**

# கண்டி இந்து கலாசார மண்டபத்தில் சந்தேக நபர்கள் தங்கிச்சென்றனர்

## முகாமையாளர் சாட்சியம்

(கொழும்பு)

தலதா மாளிகைக் குண்டு வெடிப்புச் சம்பவத்தின் சந்தேக நபர்கள் மூவரும் 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ஆம் திகதிக்குப்பின் 6 தடவைகள் கண்டி இந்து கலாசார மண்டபத்தில் தங்கியிருந்தனர் எனத் தலதா மாளிகை குண்டுவெடிப்பு வழக்கில் சாட்சியமளித்த கண்டி இந்து கலாசார மண்டபத்தின் முகாமையாளர் வி.பி. கருப்பையா தெரிவித்துள்ளார்.

1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி காலை இடம்பெற்ற தலதாமாளிகை குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் கண்டி உயர் நீதிமன்றத்தில் நீதிவான் சி. லேக்கம் வசம முன்னிலையில் இடம்பெற்றது.

இவ்வழக்கின் முதலாவது சந்தேகநபரான திருகோணமலை சுப்பிரமணியம் ரவீந்திரன் தலைமறைவாகியுள்ள நிலையில் ஏனைய மூன்று சந்தேகநபர்களும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்

கருப்பையா தொடர்ந்தும் சாட்சியமளிக்கையில் 1992ஆம் ஆண்டு முதல் நான கணடி இந்து கலாசார மண்டபத்தின் முகாமையாளராக கடமை புரிந்து வருகிறேன். இங்கு பொலிசாரின் அனுமதியோடு வெளியிடங்களில் இருந்து வருவோருக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படுகின்றன. இங்கு தங்குவோரின் பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை என்பவற்றை பதிவுசெய்து கொண்டு தங்குமிடக்கட்டட பற்றுச்சீட்டின் மூலப் பிரதி தங்குபவர்களுக்கு வழங்கப்படும். நகல்கள் அலுவலகத்தில் இருக்கும். இவ்விபரங்கள் பொலிசாருக்கு வழங்கப்படும்.

இந்து கலாசார மண்டபத்தில் தங்கியவர்களுக்கும், அறைகளில் தங்கியவர்களுக்கும் தனித்தனியே பதிவுப் புத்தகங்கள் உள்ளன 1998ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 12ம்

(10ம் பக்கம் பார்க்க)

# கொலின் பவலின் விஜயத்திற்கு முன்னதாக சவுதித் தலைநகரில் தொடர் குண்டு வெடிப்பு

(ரியாத்)
சவூதி அரேபிய தலைநகர் ரியாத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற தொடர்குண்டுவெடிப்புச் சம்பவத்தில் 3பேர் கொல்லப் பட்டதுடன் 50 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

இரவு 10 மணியளவில் கார் ஒன்றில் வெடிபொருட்களை நிரப்பிய குண்டுதாரிகள் தமது இலக்குகளை நோக்கி தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இவர்கள் அமெரிக்க அலுவலகங்கள் மற்றும் அமெரிக்கர்கள் தங்கியிருக்கும் விடுதிகளை தமது இலக்குகளைக் கொண்டு தாக்குதல்களை நடத்தியுள்ளமை தெரிய வந்துள்ளது.

இத்தாக்குதல் அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் சவுதி அரேபியத் தலைநகர் ரியாத்திற்கு விஜயம் செய்யவுள்ள சில மணித்தியாலங்களிற்கு முன்னராகவே இடம் பெற்றுள்ளது.

எனினும் தனது விஜயம் ரத்துச் செய்யப்படமாட்டாது என்றும் திட்டமிட்டபடி தான் சவுதிக்கான விஜயத்தை மேற்கொள்ளப் போவதாகவும் தெரிவித்த கொலின்பவல் இச்சம்பவம் குறித்து கடுமையான கண்டனத்தை வெளியிட்டுள்ளதுடன், இத்தாக்குதல்களை அல்கெய்டா அமைப்பே நடத்தியிருக்கலாம் என்றும் கூறியுள்ளார்.

அதேசமயம்இச்சம்பவம் குறித்து அரேபிய இளவரசர் நைவ்ஷ் பெரும் கவலை தெரிவித்துள்ளார்.

·பாரிய தாக்குதல் ஒன்றை நடத்த அல்கெய்டா இயக்கத்தினர் தீட்டி இருந்த திட்டத்தினை கடந்த சில தினங்களுக்கு முன்னர் சவுதி அரேபிய காவல்துறையினர் முறியடித்திருந்தமையும் அதனையும்மீறி தற்போது பல இடங்களில் தாக்குதல்கள் நடத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## இந்தியப்படையினர் நால்வர் பலி

(புதுடில்லி)
ஜம்மு-காஷ்மீரில் நேற்று முன்தினம் இடம் பெற்ற மோதல் சம்பவங்களில் 4 இந்தியப் படையினர் கொல்லப்பட்டதுடன் 9பேர் காயமடைந்துள்ளனர்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கும் சூழல் உருவாகியுள்ள இந்த நிலையில், ஜம்மு-காஷ்மீர் மாநிலத்தில் இவ்வாறான மோதல் சம்பவங்கள் தொடர்ந்தும் இடம் பெற்று வருகின்றமை குறித்து சமாதான ஆர்வலர்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (உ-2)

## பாக். –இந்திய சமாதான பேச்சு திட்ட வரைபுகள் தயாரிப்பு

(புதுடில்லி)
பாகிஸ்தானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முழுமையான திட்ட வரைபு தயாரிக்கப்பட்டுள்ளதாக இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந் சிங்ஹா தெரிவித்துள்ளார்.

மேலும் கருத்து வெளியிட்டுள்ள ஜஸ்வந்சிங்ஹா,

பாகிஸ்தானுடன் பேச்சு வார்த்தை நடத்துவது தொடர்பில் இந்தியாவுககு எந்தவித குழப்பமும் இல்லை. எமது நடவடிக்கைகளில் தெளிவாகவே உள்ளோம்.

எனினும்,அத்திட்டங்களை தற்போது வெளியிடமுடியாது.

இந்த நிலையில் ,பேச்சுவார்த்தை தொடர்பான தமது நாட்டின் திட்ட வரைபும தயாராகவிருப்பதாக பாகிஸ்தானின செய்தித்துறை அமைச்சர் ஷீக்ரபீர் அகமட் கூறியுள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையே கடந்த சில நாட்களாக பேச்சு வார்த்தை நடத்துவது தொடர்பாக முரண்பட்ட கருத்துக்கள் நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-2)

## காஸாப் பகுதிக்குச் செல்லும் பாதைகளை மூடப்போவதாக இஸ்ரேல் அரசு அறிவிப்பு

(ரெல்அவிவ்)
பலஸ்தீனத்தின் காஸாப்பகுதிக்குச் செலலும் வழிகளை முற்றிலும் மூடிவிடப போவதாக இஸ்ரேல் அரசு அறிவித் துள்ளது.

இஸ்ரேலுக்குள் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்படவிருப்பதாக கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்த முடிவை இஸ்ரேல் எடுத்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் கொலின்பவலுடன் இஸ்ரேல் பிரதமா ஏரியல் ஷெரோன் நடத்தவிருந்த பேச்சு வார்த்தையின் பின்னணியில் காஸாப பகுதிக்கான வழியை இஸ்ரேல் அரசு திறந்ததுடன், தடுத்து வைக்கப்பட்டிருந்த 65 பலஸ்தீனியர்களையும் விடுதலை செய்திருந்தது.

இது நடைபெற்ற 24 மணி நேரத்திற குள் மீண்டும் காஸாப் பகுதியை மூட இஸ்ரேல் அரசு உத்தரவிட்டிருப்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதனிடையே பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாஸ் மற்றும் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஆகியோருடன் தனித்தனியாகப் பேச்சுவார்த்தை நடத்திய கொலின் பவல், இரு தரப்பினரையும் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தினை ஏற்றுக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன்,மத்தியகிழக்குப் பிரச்சினை தொடர்பாக எகிப்து,ஜோர்தான் ஆகிய அமெரிக்காவின் நட்பு நாடுகளுடனும் கொலின் பவல் பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

மத்தியகிழக்குத் தீர்வுத்திட்டத்திற்கு பலஸ்தீனப் பிரதமர் ஆதரவு அளித்திருப்பதுடன்,யூதக் குடியேற்றத்தை நிறுத்துவது உட்பட பல முக்கிய நலலெண்ண நடவடிக்கைகளை இஸ்ரேல் அரசு முன்னெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார். (உ-2)

## சதாமின் ‘பாக்’ கட்சி கலைக்கப்பட்டதாக அறிவிப்பு

(வா்ஷிங்டன்)
சதாம் ஹுசைனின் கட்சியான பாக் கட்சி கலைக்கப்பட்டிருப்பதாகவும் இதனால் அந்தக்கட்சி ஆதரவாளர்களை கட்சியின் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என்றும் அமெரிக்க இராணுவம் அறிவித்துள்ளது.

மேலும், கட்சியின் முன்னைய ஆதரவாளர்களை தங்களிடம் சரணடையுமாறும் அமெரிக்கா கேட்டுள்ளது.

அந்தக்கட்சியோடு தொடர்புடைய ஆவணங்கள் வைத்திருப்பது சட்டவிரோதமானது என்றும் அவ்வாறானவர்கள் உடனடியாக கைது செய்யப்படுவார்கள் என்றும் அமெரிக்க இராணுவம் மேலும் அறிவித்துள்ளது. (உ-9)

## உள்நாட்டுப் போர் வெடிக்கும் அபாயம் இந்தோவில் இருந்து க.கா .குழு அகன்றது

(ஜகார்த்தா)
இந்தோனேஷியாவின் ஆசிய மாகாணத்தின் மேற்குப்பகுதியில் இருந்த போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த அறிவிப்பை ஆசிய விடுதலை அமைப்புக்கும், இந்தோனேசிய அரசிற்குமிடையே போர் நிறுத்த உடன்படிக்கை ஏற்படக் காரணமாகவிருந்த ஹென்சி டுனால்ட் என்ற அமைப்பு விடுத்துள்ளது.

மீண்டும் உள்நாட்டுப்போர் ஏற்படலாம் என்ற அச்சத்திலேயே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டதாக ஹென்சி டுனால்ட் அறிவித்துள்ளது.

இதேவேளை ஆசிய விடுதலை அமைப்பினர் தனிநாட்டுக் கோரிக்கையை கை விட்டு ,ஆயுதங்களை களைந்து பேச்சு வார்த்தை மேசையில் அமர வேண்டும் என்று இந்தோனேஷிய அரசு கூறியுள்ளது.

அத்துடன் ,தமது நிபந்தனைகளுக்கு ஆசிய விடுதலை அமைப்பினர் குறித்த காலத்துக்குள் கட்டுப்படவில்லை என்றால் அவர்கள் மீது படை நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் இந்தோனேஷியஅரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.(உ-2)

## அரசின் நிலைப்பாட்டை எதிர்த்து பிரி.அமைச்சர் பதவி விலகினார்

(லண்டன்)
பிரிட்டிஷ் அரசாங்கத்தின் ஈராக் தொடர்பான நிலைப்பாட்டிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் முகமாக பிரிட்டிஷின் வெளிநாட்டு அபிவிருத்தி உதவிகளுக்கான பெண் அமைச்சராக கடமையாற்றி வந்த கிளேயர் ஷோட் பதவி விலகியுள்ளார்.

ஈராக் மீதான அமெரிக்கக் கூட்டுப் படையினரின் போர் முடிவடைந்த பின்னர் ஐக்கிய நாடுகள் சபைக்கு ஈராக் விடயத்தில் இருக்கக்கூடிய பங்களிப்பு குறித்து தமக்கு வழங்கியிருந்த வாக்குறுதிகளை பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயர் மீறிவிட்டதாகக் கூறியே இவர் பதவி வில கியுள்ளார்.

இவர் தனது பதவி விலகல் குறித்து கருத்து கூறுகையில்,

ஈராக்கின் அபிவிருத்தி வேலைக்கு ஐ.நா பாதுகாப்பு சபை தான் அங்கீகாரமளிக்க வேண்டும். பக்தாத் நிர்வாகத்தை அமைப்பதற்கு அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு எந்த வித உரிமைகளும் கிடையாது.

தற்போது அமெரிக்காவும் பிரிட்டனும் ஐ.நாவில் முன் வைத்துள்ள பிரேரணைகள், தீர்மானங்களின் வரையறைகள் நியாயப்படுத்த முடியாத ஒரு திட்டம் எனக் கூறியுள்ளார்.

இவரது கருத்துத்தொடர்பில் பிரதமர் ரொனி பிளேயர் சார்பில் அதிகாரியொருவர் தமக்குத் தெரிந்த வகையில் கொடுத்த வாக்குறுதி ஒன்றை பிரதமர் மீறியதாகத் தெரியாது என்று கூறியுள்ளார்.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையில் அமெரிக்கா,பிரிட்டன் ஆகிய நாடுகளால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மானங்களின் வரைபில் ஐக்கிய நாடுகள் சபைக்கு முக்கியமான பங்கு இருக்கின்றதென பிரிட்டிஷ் வெளியுறவுத்துறை அமைச்சர் கூறியுள்ளார். (உ-2)

## காஸாப் பகுதிக்குச் செல்லும் பாதைகளை மூடப்போவதாக இஸ். அறிவிப்பு

(ரெல்அவிவ்)
பலஸ்தீனத்தின் காஸாப்பகுதிக்குச் செல்லும் வழிகளை முற்றிலும் மூடிவிடப்போவதாக இஸ்ரேல் அரசு அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்குள் தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்புடவிருப்பதாக கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இந்த முடிவை இஸ்ரேல் எடுத்துள்ளது.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளா கொலின் பவலுடன் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் நடத்தவிருந்த பேச்சுவார்த்தையின் பின்னணியில காஸாப் பகுதிக்கான வழியை இஸ்ரேல் அரசு திறந்ததுடன், தடுத்து வைக்கப்பட்டிருந்த 65 பலஸ்தீனியர்களையும் விடுதலை செய்திருந்தது.

இது நடைபெற்ற 24 மணி நேரததிற்குள் மீண்டும் காஸாப் பகுதியை மூட இஸ்ரேல் அரசு உத்தரவிட்டிருபபது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

இதனிடையே பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாஸ் மற்றும் இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோன் ஆகியோருடன் தனித்தனியாகப் பேச்சுவார்த்தை நடத்திய கொலின்பவல் இரு தரப்பினரையும் மத்திய கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தினை ஏற்றுக்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அத்துடன், மத்தியகிழக்குப் பிரச்சினை தொடர்பாக எகிப்து, ஜோர்தான் ஆகிய அமெரிக்காவின் நட்பு நாடுகளுடனும் கொலின் பவல் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

மத்திய கிழக்கு தீர்வுத்திட்டத்திற்கு பலஸ்தீனப் பிரதமர் ஆதரவு அளித்திருப்பதுடன், யூதக்குடியேற்றத்தை நிறுத்துவது உட்பட பல முக்கிய நல்லெண்ண நடவடிக்கைகளை இஸரேல் அரசு முன்னெடுக்க வேண்டும் என்றும கேட்டுக் கொண்டுள்ளார். (உ-2)

## சார்ஸ்ஸைக் கட்டுப்படுத்த ஆசிய அபி.வங்கி நிதி உதவி

(நியுயோர்க்)
சார்ஸ் நோயைக் கட்டுப்படுத்த 2கோடியே 70 இலட்சம் டொலர்களினை நிதி உதவியாகவழங்க ஆசிய அபிவிருத்திவங்கி தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக சீனாவிற்கான நிதி உதவியாக 20 இலட்சம் டொலர்களை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

30 நாடுகளில் சார்ஸ் நோய் பரவியுள்ளதுடன், சீனாவில் மட்டும் இந்த நோயால் 7ஆயிரம் பேர் பீடிக்கப்பட்டுள்ளனர்.இதேவேளை,கையடக்கத் தொலைபேசிமூலமாக சார்ஸ் நோய் குறித்த வதந்திகள பரப்பப்பட்டு வருவதாகவும் இவ்வாறு வதந்திபரப்புபவர்கள் மீது சீன அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கப் போவதாக அறிவித்துள்ளது. (உ-2)

## அமெரிக்கா மீது வடகொரியாசீற்றம்

(பியோங்யாங்)
கொரியத்தீப கற்பத்தில் சர்ச்சை ஏற்படுவதற்கு அமெரிக்காவே காரணம் என்று வடகொரியா குற்றஞ்சாட்டியுள்ளது.

இக குற்றச்சாட்டினை வடகொரியாவின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

கொரியத் தீபகற்பத்தில் அணுவாயுத நெருக்கடிகள் உருவாகுவதற்கும் தென் கொரியாவுடனான சமாதானப் பேச்சுக்கள் தடம் புரள்வதற்கும் அமெரிக்காவே காரணம் என்றும் மேலும் குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

இதேவேளை, வட கொரியாவின் அணு ஆயுத உற்பத்தியை முற்றாகத் தடுக்க வேண்டும் என்று தென் கொரிய ஜனாதிபதி ரோமூகூன் கூறியுள்ளார்.

வடகொரியாவின் அணு ஆயுத உற்பத்தி நடவடிக்கைகளால் அந்த நாடு உலக நாடுகள் மத்தியில் மதிப்பிழந்து காணப்படுவதாக வும் தென் கொரிய ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்.(உ-2)

## இஸ்ரேல் –பலஸ்தீன பிரதமர்கள் சந்திப்பு

(ரெல்அவிவ்)
இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனை பலஸ்தீனப் பிரதமர் முகமட் அப்பாஸ் எதிர்வரும் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

அமெரிக்க இராஜாங்க அமைச்சர் கொலின் பவலின் மத்திய கிழக்கு விஜயத்தையடுத்து இரு பிரதமர்களும் சந்திக்கவுள்ளார்கள் என்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய கிழக்கில் சமாதானத்தை நிலை நாட்ட தங்களால் இயன்றளவிலான உதவிகளை மேற்கொள்ளுமாறு அமெரிக்க அதிபர் ஜோர்ச் டபிள்யூ புஷ் இவர்களை வலியுறுத்தியிருப்பதாக அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கன்டலீசாரைஸ் தெரிவித்துள்ளார். (உ-2)

## ஈராக்கிற்கான உணவுத்திட்டம் ஐ.நா.விரைவில் ஆரம்பம்

(நியுயோர்க்)
ஈராக்கிற்கான உணவுத்திட்டத்தை எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பிக்க ஐக்கிய நாடுகள் சபை தீர்மானித்துள்ளது.

6 மாதகாலத்திற்கு வகுக்கப் பட்டுள்ள இத் திட்டத்திற்கு சுமார் 2 பிலலியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகளுககான உலக உணவுத்திட்டம் அறிவித்துள்ளது.

இதற்காக உதவி வழங்க முன் வரும் நாடுகளின் ஒத்துழைப்பையும் இந்த அமைப்பு கோரியுள்ளது.

இத்திட்ட.த்தின் மூலம் 60 வீதமான ஈராக்கிய மக்கள் பயன் பெறுவார்களென தெரிவிக்கப்படுகின்றது. (உ-2)

# தரம்-5 புலமைப்பரிசில்
## பயிற்சி வினாத்தாள்

வினா இல:16 ஆக்கம்: சுந்தர் வெளியீடு

**கீழ்வருவதைக் கவனமாக வாசித்துப் பொருத்தமான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக**

**யா/சிவபுரம் வடக்கு புனித மரியாள் கல்லூரி**

விஞ்ஞான மாணவர் மன்றம் நடாத்தும் **இளம் துளிர் மலர் வெளியீடு**

| | |
|---|---|
| காலம் | :- 24-04-2003 வியாழக்கிழமை பி.ப 1.00 மணி |
| இடம் | :- லோங்ஸ் மண்டபம் |
| தலைவர் | :- செல்வன் ஸ்ரீவரன் |
| ஆசியுரை | :- திரு.க.யேசுரட்ணம் (அதிபர்) |
| வாழ்த்துரை | :- திரு.பொன்.சபாரத்தினம் (ஆசிரியர்) |
| பிரதம விருந்தினர் | :- கலாநிதி பொன்.சக்திவேல் தம்பதிகள் (தலைவர், நுண்கலைத்துறை, கொழும்பு பல்கலைக்கழகம்) |
| சிறப்பு விருந்தினர் | :- திரு.ச.ஜெயரத்தினம். (முகாமையாளர், வ.பி.போ.ச) |
| கௌரவ விருந்தினர் | :- திரு.க.சுந்தரலிங்கம். (முகாமையாளர், கூ.மொ.வி.நி) |
| வெளியீட்டுரை | :- திரு.வி.அருளம்பலம் (முகாமையாளர், தேசிய சேமிப்பு வங்கி, சிவபுரம்) |
| மதிப்பீட்டுரை | :- திரு.சி.விஜயரத்தினம் (விரிவுரையாளர், விஞ்ஞானபீடம், யாழ்.பல்கலைக்கழகம்) |
| முதற் பிரதி பெறுபவர் | :- திரு.பொ.சிவசுப்பிரமணியம் (உரிமையாளர் K.S.V.Group) |

சிவபுரம் வடக்கு
சிவபுரம்
யாழ்ப்பாணம்.

விஞ்ஞான மாணவர் மன்றம்
புனித மரியாள் கல்லூரி.

01. இது விபரிக்கும் விடயத்தை தனியொரு சொல்லாக எழுதுக....................
02. இங்கு வெளியிடப்படும் மலரின் பெயர் என்ன? ..............................
03. ''மலர்'' என்னும் சொல்லின் வேறுபட்ட இரு கருத்துக்களை எழுதுக..........
04. இந்த நிகழ்வு எப்போது நடைபெறும் என எழுதுக. ..............................
05. இந்த நிகழ்வு இடம் பெறும் நேரத்தை நியம நேரமாக எழுதுக...............
06. இந்த நிகழ்வுக்குத் தலைமை தாங்குபவர் பெயரை எழுதுக.......................
07. பிரதம விருந்தினராகக் கலந்து கொள்பவர் பெயரை எழுதுக......................
08. இந்த மலரை மதிப்பீடு செய்து உரையாற்றுபவர் பெயரை எழுதுக............
09. வ.பி.போ.ச என்பதன் விரிவாக்கம் என்ன?......................................
10. கூ.மொ.வி.நி என்பதன் விரிவாக்கத்தை எழுதுக.................................

✲ **கீழே தரப்பட்டுள்ள விடுகதைகளை விடுவிக்குக.**

11. வெளியில் போகும் போது நண்பன் வீட்டுக்குள் வந்தால் விரோதி அவன் யார்?......
12. நீந்தத் தெரியும் மீனல்ல. நடக்கத் தெரியும் மனிதனல்ல. இறக்கையுண்டு தேனியல்ல. இறகு கொண்டு பறக்காது அது என்ன?..............................
13. வானம் விடும் கண்ணீர் எது?......................................
14. மேலே பறப்பவனுக்கு கீழே கடிவாளம் அது என்ன? ..............................
15. மீன் பிடிக்கத் தெரியாது. ஆனால் வலை பின்னுவான். அவன் யார்?............

✲ **கீழ்வரும் பந்தியை வாசிக்குக.**

**மலேரியாக் காய்ச்சல் என்கிறோம். 'மலேரியா' என்பது இத்தாலியச் சொல்லிலிருந்து பிறந்தது. 'மலா' என்றால் சதுப்பு நிலம் என்றும் 'ஏரியா' என்றால் அசுத்தக் காற்று என்றும் இத்தாலி மொழியில் பொருள். இந்தக் காற்றினால் தான் காய்ச்சல் வருவதாக இத்தாலியர்கள் நம்பியதாலே மலேரியா என்று அக்காய்ச்சல் பெயர் பெற்றது.**

✲ **கீழ்வருவனவற்றின் பொருளைத் தரும் தமிழ்ச் சொற்களை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

16. தரை.......................................... 17. பாஷை........................................

✲ **கீழ்வரும் சொற்களின் பொருளைத் தரும் இத்தாலியச் சொற்களை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.**

18. சதுப்பு நிலம்............................ 19. அசுத்தக் காற்று..........................
20. ''Fever'' என்னும் சொல்லின் பொருளை உணர்த்தும் தமிழ்ச் சொல்லை பந்தியில் இருந்து தெரிவு செய்து எழுதுக.
..............................................................................

✲ கீழ்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

21. 1985-04-21 இல் சாருமதியின் வயது 10 ஆண்டு 4 மாதம் 28 நாட்கள் எனின், சாருமதியின் பிறந்த தினம் என்ன?
..............................................................................
22. பயணம் ஒன்று 7 மணித்தியாலங்கள் 45 நிமிடங்கள் வரை நடைபெற்று பி.ப.9.50 மணிக்கு நிறைவடைந்தது. பயணம் ஆரம்பித்த நேரத்தை எழுதுக?
..............................................................................
23. [செவ்வகம்: 12m40cm, 4m75cm] இவ்வுருவின் சுற்றளவு என்ன?.....................
24. $\frac{1}{3}$, $\frac{1}{12}$, $\frac{1}{6}$, $\frac{1}{8}$ ஆகிய எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக............
25. 215.3 உடன் 34.8இனைக் கூட்டுக.....................................
26. 0.7 இனைப் பின்னமாக எழுதுக..................................
27. 30 நாட்களிலும் குறைவான நாட்களையுடைய மாதங்களினதும் 30 நாட்களிலும் கூடுதலான நாட்களையுடைய மாதங்களினதும் பெயர்களை ஆங்கிலத்தில் எழுதுக......
28. $\frac{4}{7} = \frac{\square}{21} = \frac{32}{\square}$ கூடுகளுக்குப் பொருத்தமான எண்களை எழுதுக...........
29. 6நாள் வேலை வாரம் கொண்ட ஒரு மாதத்தில் தொழிலாளி ஒருவரின் நாட் சம்பளம் ரூபா 250 ஆகும். ஆயினும் சனிக்கிழமைகளில் நடைபெறும் வேலைக்கு வழமையான சம்பளத்துடன் மேலதிகமாக ரூபா 250 வழங்கப்படும். இரு வார முடிவில் தொழிலாளி பெறும் சம்பளத்தை எழுதுக.
30. ஒரு குறிப்பிட்ட பரீட்சை விஞ்ஞானம், கணிதம் இரு பாடங்களில் மட்டும் நடைபெற்றது. 200 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். அவர்களில் 100பேர் கணிதமும் 120 பேர் விஞ்ஞானமும் சித்தியடைந்தனர். விஞ்ஞானம் சித்தியடையாதோர் எத்தனை பேர்?

✲ **குறித்த ஒரு வாரத்தில் தொடர்ந்து 5 நாட்கள் குறித்த ஒரு வீதியூடாக பயணம் செய்த வாகனங்களின் எண்ணிக்கையை இவ்வட்டவணை காட்டுகின்றது. இதை நன்கு விளங்கிக் கொண்டு தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை தருக.**

| தினம் | வாகன எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|
| திங்கள் | | |
| செவ்வாய் | | 120 |
| புதன் | | 110 |
| வியாழன் | | |
| வெள்ளி | | 95 |

31. செவ்வாய்க்கிழமையிலும் வெள்ளிக்கிழமையிலும் பயணம் செய்த வாகன எண்ணிக்கை என்ன? (விடையை அட்டவணையில் எழுதுக)
32. திங்கள், வியாழன் ஆகிய இரு நாட்களிலும் வந்த வாகன எண்ணிக்கையை வரவுக் குறிகளில் குறித்துக் காட்டுக.
33. கூடுதலான வாகனங்கள் வந்த நாள் எது?..........................................
34. வாகன ஓட்டம் குறைவாக இருந்த நாள் எது?......................................
35. இவ்வாரத்தில் வாகனங்கள் ஓடாமல் இருந்த நாட்கள் எவை?.................

✲ **ஒரு குடும்பத்தில் உள்ளவர்களது வயது எல்லைகளும் அவர்கள் கடமைகளும் வருமாறு**

**15 வயதிற்கு குறைந்தவர்கள் பாடசாலை செல்கின்றனர்.**
**15-25 வயதிற்குட்பட்டவர்கள் உயர் கல்வி கற்கின்றனர்.**
**25-55 வயதிற்குட்பட்டவர்கள் தொழில் செய்கின்றனர்.**
**55 வயதிற்கு மேற்பட்டோர் ஓய்வாக உள்ளனர்.**

**ராஜா தான் பாடசாலை செல்லும் போது வரனைப் பாடசாலையிலும் மஞ்சுவை பல்கலைக்கழகத்திலும் சேர்த்து விட்டு தனது தந்தையாரை பிள்ளையார் ஆலயத்தில் இறக்கி விட்டு சென்றார். ராஜாவின் தந்தையார் சுப்பிரமணியத்தின் பேரப்பிள்ளைகள் வரன், மஞ்சு, துளசி ஆகியோர் ஆவர்.**

36. ராஜாவின் வயது எல்லை என்ன?..............................................
37. வரனின் வயது 12 ஆண்டுகள் எனின், மஞ்சு வரனைவிட குறைந்தது எத்தனை ஆண்டுகள் மூத்தவனாக இருப்பான்? ..............................
38. சுப்பிரமணியத்தின் மிகக் குறைந்த வயது என்னவாக இருக்கும்?.............

**கல்விச் சுற்றுலா ஒன்றின்போது பங்குபற்றியவர்களில் சிலர் யாழ். கோட்டையையும் அதன் இடிபாடுகளையும் பார்வையிட்டனர். யாழ். கோட்டையைப் பார்வையிட்ட அனைவரும் யாழ். கோட்டை முனீஸ்வரர் ஆலயத்திற்குச் சென்று வழிபாடு செய்தனர். ஆலய வழிபாட்டில் என் தங்கை கற்பூரம் கொளுத்தி அர்ச்சனை செய்தாள்.**

**இந்தத் தகவல்களின் பிரகாரம் கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் ''S'' எனவும் பிழையாயின் ''R'' எனவும் கூறமுடியாது எனின் ''T'' எனவும் எதிரேயுள்ள கூட்டினுள் எழுதுக.**


39. இச்சுற்றுலாவில் மாணவிகளும் பங்கு பற்றினர். (...............)
40. இச்சுற்றுலாவில் ஆலயதரிசனம் செய்தோர் எண்ணிக்கை கோட்டையைப் பார்த்தோரின் எண்ணிக்கையிலும் அதிகம். (...............)
41. ஆண்கள் மாத்திரம் கோட்டையைப் பார்வையிட்டனர். (.............)
42. சுற்றுலாவில் கலந்து கொண்ட அனைவரும் கோட்டை முனீஸ்வரர் ஆலய தரிசனம் செய்தனர். (.............)

**''எமது நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு கணியங்களை அளக்கின்றோம். சில அளவீடுகள் செம்மையாகவும் சில திருத்தமற்றும் அளக்கப்படுகின்றன''**

**கீழ்வரும் சந்தர்ப்பங்கள் ஒவ்வொன்றிலும் அளத்தலுக்குப் பயன்படும் கருவி / அமைப்புக்களைப் பெயரிடுக.**

| | சந்தர்ப்பம் | கருவி/அமைப்பு |
|---|---|---|
| 43. | ஒரு பொருளின் நீளத்தை அளத்தல் | |
| 44. | ஒரு பொருளின் நிறையை அளத்தல் | |
| 45. | நேரத்தை / காலத்தை அளத்தல் | |
| 46. | ஒரு நாளின் வெப்பநிலையை அளத்தல் | |
| 47. | மனிதனின் உடல் வெப்பநிலையை அளத்தல | |
| 48. | ஒரு நாள் பெய்த மழை வீழ்ச்சியை அளத்தல் | |
| 49. | காற்று வீசும் திசையை அறிதல் | |
| 50. | காற்று வீசும் வேகத்தை அளத்தல் | |

**கீழ்வரும் சந்தர்ப்பங்களில் பெறப்படும் அவதானங்களை எழுதுக. இங்கு பயன் படுத்தப்பட்டுள்ள பாத்திரங்கள் யாவும் ஒளிபுகக் கூடிய கண்ணாடிப் பாத்திரங்கள் ஆகும்.**




.............................. .............................. ..............................

**கீழ்வரும் கூற்றுக்கள் சரியாயின் ''சரி'' எனவும் பிழையாயின் ''பிழை'' எனவும் இடைவெளியில் எழுதுக.**

54. ஈரமான காலுடன் சீமெந்துத் தரையில் நடக்கும் போது பாதத்தின் அடையாளம் தரையில் பதிந்து சிறிது நேரத்தில் அழிந்து விடும். (................)
55. பீங்கான் பொருட்கள் இலகுவில் உடையக் கூடியவை. (................)
56. நீர் உள்ளடக்கும் பாத்திரத்தின் வடிவத்தை எடுக்க மாட்டாது. நிலையான வடிவம் கொண்டது. (..............)
57. டெங்கு நோயைப் பரப்பும் நுளம்பு சுத்தமான நீரில் முட்டை இடுகின்றது.(.....)
58. நீர் குடிப்பதற்கு, கழுவுவதற்கு பயன்படுத்துவதோடு சமயச் சடங்குகளிலும் பயன்படுகின்றது. (.............)
59. காலாவதி அடைந்த உணவுப் பொருட்களை உட்கொள்ளுதல் உடலுக்கு ஆரோக்கியமாகும். (...........)
60. தேசியக் கொடியில் உள்ள செம்மஞ்சள் நிறம் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. (...........)

கீழே சில செயற்பாடுகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் வளி /காற்று தொடர்பு படுகின்றது எனின் (✓) எனவும் வளி/காற்று அவசியமில்லை எனின் (✗) எனவும் புள்ளிக் கோட்டில் அடையாளமிடுக.

61. வானத்தில் பட்டம் பறத்தல் (.............)
62. தாவரங்கள் வளர்ச்சி அடைவதற்கு (............)
63. உலங்கு வானூர்தி மேலெழுந்து செல்லுதல் (............)
64. உப்பளங்களில் உப்பைப் பெற்றுக் கொள்வதற்கு இயற்கையான காற்றைப் பயன்படுத்துதல். (.............)
65. தீ மூட்டுவதற்கு/சுவாலை விட்டு எரியச் செய்வதற்கு (..............)

**இலக்கம் 66 முதல் 70 வரையிலான வினாக்களில் ஒவ்வொரு தேவையையும் பெற்றுக் கொள்வதற்காக நீங்கள் போக வேண்டிய இடம் எது என்பதை அறிந்து அதற்குரிய இலக்கத்தை நடுவே உள்ள கூட்டினுள் எழுதுக. உதாரணமாக முதலாவது செய்யப்பட்டுள்ளதை அவதானிக்க.**

| | சேவை | விடை | போக வேண்டிய இடம் |
|---|---|---|---|
| | வாகனத்தை காப்புறுதி செய்தல் | F | A நீர் வழங்கல் வடிகால் சபை அலுவலகம் |
| 66. | முத்திரையை விலைக்கு வாங்குதல் | | B இலங்கை மின்சாரசபை அலுவலகம் |
| 67. | போலியோ ஊசியை ஏற்றுதல் | | C பிரதேச சபை அலுவலகம் |
| 68. | சைக்கிள் வண்டிக்கு அனுமதிப் பத்திரம் பெற்றுக் கொள்ளல் | | D அஞ்சல் அலுவலகம் |
| 69. | இல்லத்திற்கு மின்சார இணைப்பை பெறுதல் | | E சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் |
| 70. | இல்லத்திற்கு குழாய் நீர் வசதியைப் பெறுதல் | | F காப்புறுதிக் கூட்டுத்தாபனம் |

**இலக்கம் 70முதல் 75வரையிலான வினாக்களில் ஒவ்வொரு இடத்திலிருந்தும் பெறக்கூடிய சேவை எது என்பதை தெரிவு செய்து அச்சேவையை நடுவே உள்ள கூட்டினுள் எழுதுக.**

| | இடம் | விடை | சேவை |
|---|---|---|---|
| | மாவட்டச் செயலகம் | | A பிறப்புச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளல் |
| 71. | பொலிஸ் நிலையம் | | B மரப்பலகை வெட்டுவதற்கு அனுமதிப்பத்திரம் பெறுதல் |
| 72. | மாவட்ட தேர்தல்ஆணையாளர் அலுவலகம் | | C தென்னை பயிர்ச் செய்கைக்கான பசளையை அறிந்து கொள்ளல் |
| 73. | வங்கி | | D வாக்காளர் இடாப்பில் பிரதியொன்றைப் பெற்றுக் கொள்ளல் |
| 74. | விவசாயிகள் சேவை மத்திய நிலையம் | | E காணாமல் போன அடையாள அட்டை பற்றிய அறிக்கையைப் பதிவு செய்தல் |
| 75. | பிறப்பு, இறப்பு, திருமணம் பதிவு செய்யும் அலுவலகம் | | F சேமிப்புக் கணக்கொன்றை ஆரம்பித்தல் |

கீழே ஒரு கதையை ஆக்குவதற்கான ஆரம்பம் தரப்பட்டுள்ளது. அதைக் கவனமாக வாசித்து விளங்கிக் கொண்டு தொடர்ந்து எழுதுக. ஆகக் குறைந்தது ஆறு வாக்கியங்களாவது எழுதுதல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் எழுவாய், பயனிலை சரியாகவும் நான்கு சொற்களுக்கு குறையாதும் இருத்தல் வேண்டும்.

**ஒரு அமாவாசை நாள் எங்கும் ஒரே இருட்டு, நேரம் நள்ளிரவு 12மணியிருக்கும் யாரோ எங்கள் வீட்டுக் கதவைத் தட்டுகின்றனர்.**

76.......................................................
77.......................................................
78.......................................................
79.......................................................
80.......................................................
81.......................................................

## 5ம்தர புலமைப்பரீட்சை வினாத்தாள்-16

மாணவர் முழுப்பெயர்:..................................
பாடசாலையின் பெயர் :..................................
வீட்டின் முகவரி:..................................

மாணவர்களே உங்கள் விடைகளை 21.05.2003 க்கு முன் அனுப்பி வைக்கவும். உங்கள் விடைகளுடன் இக்கூப்பனையும் வெட்டி இணைக்கவும்.

**வலம்புரி**
**கல்விப் பகுதி**
**15, வெள்ளாந்தெரு,**
**யாழ்ப்பாணம்.**

**குறிப்பு: மாணவர்களின் நலன்கருதி இவ்வினாத்தாளை வைத்துக் கொண்டு, வினாக்களுக்கான விடைகளை மட்டும் வேறொருதாளில் எழுதிக் கூப்பனுடன் சேர்த்து அனுப்பவும். வினா இலக்கங்களைச் சரியாகக் குறிப்பிடவும். பாடசாலையின் பெயரினை முழுமையாக எழுதவும்.**

## தரம்-5 புலமைப்பரிசில் பயிற்சி வினாத்தாள்

**வினா இல : 14**

### கூடிய புள்ளி ஒழுங்கில் மாணவர் பெயர் விபரம் வருமாறு

01. தி.ஜெயந்தி - அச்சுவேலி மத்திய கல்லூரி.
02. க.கரிசினி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
03. ம.கஜீபா - கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம்.
04. செ.திலக்ஷன் - மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம்.
05. சி.கோவர்த்தன் - கம்பர்மலை அ.த.க.பாடசாலை.
06. சி.தேவகி - துன்னாலை மெ.மி.கூ.க பாடசாலை.
07. தி.கோபிராஜ் - உடுப்பிட்டி அ.மி. கல்லூரி.
08. சி.டினோஜன் -ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
09. பு.கபிலா - புத்தகலட்டி ஸ்ரீவிஷ்ணு வித்தியாலயம்.
10. பா.சந்திரா - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
11. பி.நந்தினி - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
12. பி.ஜோதிகா வல்வை சிவகுரு வித்தியாசாலை.
13. ச.தனேஷன் - திருநெல்வேலி இந்து தமிழ்கலவன் பாடசாலை.
14. வி.கஸ்தூரி - வல்வை றோ.க.த.க.பாடசாலை.
15. பி.யோபிதா - வல்வை சிவகுரு வித்தியாசாலை.
16. ஸ்ரீ.நீரஜா - வல்லை மகளிர் மகாவித்தியாலயம்.
17. சி.ஜெயக்குமார் - வல்வைஅ.மி.த.க.பாடசாலை
18. ம.சிவறோசன் - வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி.
19. பு.லதுஷா - யா/இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை.
20. சி.பிரகாஷ் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
21. ம.சரண்யன் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
22. இ.சுபாஷன் - நீர்வேலி சீ.சி.தமிழ்கலவன் பாடசாலை.
23. த.தனுசியா - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
24. ச.ஜெயபாரதி - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
25. ம.வித்தியா - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
26. தி.சுஜிக்கா - சுழிபுரம் ஐக்கிய சங்கசைவ வித்தியாசாலை.
27. த.வினோ - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
28. ச.ஜயகணேஸ் - கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.
29. ஸ்ரீ.சரத்பவன் - கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி.
30. இ.மதனிகா - வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
31. பி.லக்சிகா - அமெரிக்கன் மிஷன் தமிழ்கலவன் பாடசாலை.
32. சி.அபிராமி - யா/இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை.
33. இ.வினுஷா - மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.
34. வி.கல்யாணி - வல்வை றோ.க.த.க.பாடசாலை.
35. க.பிரசாயினி - கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை.
36. த.சிவதாஸ் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
37. த.துவாரகா - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
38. த.தமிழினி - நவாலி மகாவித்தியாலயம்.
39. இ.பவீசன் - உடுவில் மகளிர் கல்லூரி.
40. பா.பிரியதர்சினி - பொலிகண்டி இ.த.க.பாடசாலை.
41. வி.தனுசிகா - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
42. சோ.துவாரஹன் -யா/இந்து ஆரம்பப்பாடசாலை.
43. த.விஜிதன் - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
44. செ.தர்சிகா - புலோலி
45. தே.யோகராகுலன் - நீர்வேலி சீ.சி.த.க.பாடசாலை.
46. இ.சுபாஷன் - நீர்வேலி சீ.சி.த.க.பாடசாலை.
47. ப.கௌஷிகேசன் - துன்னாலை மே.மி.த.க பாடசாலை.
48. பு.உஷ்சாந்தி - நெல்லியடி மெ.மி.த.க.பாடாசலை.
49. ம.இந்துஷா - மல்லாகம் கனிஸ்ட வித்தியாலயம்.
50. சி.தேவகி - புத்தகலட்டி ஸ்ரீ விஷ்ணு வித்தியாலயம்.
51. ந.கஜீபன் - மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
52. ர.ஜதுர்சன் - யா/இந்து ஆரம்பப்பாடசாலை.
53. செ.சாரங்கன் - துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை.
54. வ.தேனுகா - வல்வை சிவகுரு வித்தியாசாலை.
55. சா.மதுரமி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
56. ச.ஷண்மதுரன் - சுழிபுரம் ஐக்கிய சங்கசைவ வித்தியாசாலை.
57. ந.பவிதா - ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை.
58. ப.லேக்கா - வட்டு. யாழ்ப்பாணக்கல்லூரி.
59. பா.டினேஸ் - துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை.
60. கி.லக்சனா - கரவெட்டி ஞானாசாரியார் கல்லூரி.
61. சூ.கவிஸ்தன் - கோப்பாய் மகாவித்தியாலயம்.
62. து.வைஷ்ணவி - ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை.
63. த.பிரியந்தி - கரவெட்டி மாணிக்கவாசக வித்தியாலயம்.
64. க.சிந்துஜன் - துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை.
65. ச.சுபஸ்தகா - இருபாலை சீ.சி தமிழ்க்கலவன் பாடசாலை.
66. ச.நந்துஜா - யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.
67. ந.நிவாஷன் - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
68. த.நீருஜா - வல்வை றோ.க.த.க.பாடசாலை.
69. சி.மனோஜிதன் - கொக்குவில் இந்துஆரம்பப் பாடசாலை.
70. உ.விதுசன் - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
71. எ.வினிஸ்ரன் - மல்லாகம் கனிஸ்ட வித்தியாலயம்.
72. இ.இரஜபிரவிந்தன் - மானிப்பாய் சோதிவேம்படி வித்தியாசாலை.
73. த.கபிலன் - யா/பரியோவான் கல்லூரி.
74. மு.பிருந்தா - நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை.
75. சு. கிருஷாந் - கரவெட்டி மகாவித்தியாலயம்.
76. சி.துளசிகா - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.
77. ஆ.நிரோஜினி - நாவலி செண்பீற்றர் றோ.க.த.க.பாடசாலை.
78. செ.சிவதர்சினி - வல்வை மகளிர் மகாவித்தியாலயம்.
79. ஜெ.கயாழினி - கல்வியங்காடு இ.த.க.பாடசாலை.
80. சி.ஜோதிகா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
81. ம.விதுர்ஷா - கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலை.
82. ச.இதயச்சந்திரன் - வட்டு. கார்த்திகேய வித்தியாசாலை.
83. ப.சாருஜா - யா/இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை.
84. ந.சரண்யா - மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை.
85. பா.துஷாந்தி - யா/பெரியபுலம் மகாவித்தியாலயம்.
86. சு.மகிழினி - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
87. வி.விதூஷன் - வல்வை அ.மி.த.க.பாடசாலை.
88. பொ.கோகிலன் - மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை.
89. வி.அமலா - காசிப்பிள்ளை வித்தியாலயம்.
90. த.அகர்சனன் - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
91. பு.கோபிகா - வடலியடைப்பு சைவப் பிரகாச வித்தியாசாலை.
92. யோ.லவிஜெனா - அச்சுவேலி மத்திய கல்லூரி.
93. ச.சஜ"தீப் - சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்.
94. நே.லாவண்யன் - தாவடி இந்து தமிழ்கலவன் பாடசாலை.
95. மே.நீதினி - யா/இந்து ஆரம்பப் பாடசாலை.
96. பே.யதிஸ்கரன் - மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை.
97. ம.கார்த்திகா - மட்டுவில் அமெரிக்கன் மிஷன் த.க.பாடசாலை.
98. ரா.துர்க்கா - கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
99. சி.சஞ்சிகா - ஆனைக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாலயம்.
100. ச.சோபிதா - துன்னாலை மெ.மி.த.க.பாடசாலை.
101. சி.சஸ்மிதா - ஆனைக்கோட்டை அ.மி.த.க.பாடசாலை.
102. வி.கரூஷன் - இணுவில் மத்திய கல்லூரி.
103. ச.அபிநயா - யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.
104. வி.மேனஜா - நவாலி மகாவித்தியாலயம்.
105. வி.துஷ்யந்தன் - நயினாதீவு நாகபூசணி வித்தியாலயம்.
106. ச.மேனுஷா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
107. லோ.பிரதாஸ் - ஏழாலை சைவ சன்மார்க்க வித்தியாலயம்.
108. சி.திலக்ஷன் - மானிப்பாய் விவேகானந்த வித்தியாலயம்.
109. தெ.வாசுகி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
110. க.அனுஜன் - ஆனைப்பந்தி மெ.மி.வி.
111. செ.திருக்குமரன் - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.
112. கீ.அச்சுதன் - யா/டிறிபேக் கல்லூரி.
113. ச.சகுர்த்திகா - கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
114. வே.நிதூஷன் - யா/மத்திய கல்லூரி.
115. ப.சுகீர்த்தனா - தேவரையாளி இந்துக்கல்லூரி.
116. சி.சுஜீபனா - அச்சவேலி மத்திய கல்லூரி.
117. ஆ.தர்சனா - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
118. இ.கிரிசாந் - யா/மத்திய கல்லூரி.
119. கி.யாழினி - நவாலி மகாவித்தியாலயம்.
120. ப.குகதர்சினி - அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை.
121. கு.வாணி - உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
122. செ.கலிஸ்ரா - நவாலி செண்பீற்றர் றோ.க.த.க.பாடசாலை.
123. கு.கிருசா - நவாலி மகாவித்தியாலயம்.
124. ஜெ.கேமசுதன் - உடுவில் மகளிர் கல்லூரி.
125. ச.அருண் - இணுவில் மத்திய கல்லூரி.
126. சி.தயனி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.
127. க.லக்ஷனா - கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்.
128. இ.சரண்யா - நவாலி மகாவித்தியாலயம்.
129. மு.கீதாஜினி - புத்தகலட்டி ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம்.
130. கு.விஜிதா - வல்வை றோ.க.த.க.பாடசாலை.
131. ஐ.சயோராஜ் - யா/மத்திய கல்லூரி.
132. த.ரூசிகா - இணுவில் மத்திய கல்லூரி.
133. க.யரூஷனா - தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி.
134. பா.சியாமளா - நவாலி மகாவித்தியாலயம்.
135. பு.பபிகரன் - அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம்.
136. ம.அபிவர்ஷனி - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
137. க.கணபாலன் - யா/இந்து ஆரம்பப்பாடசாலை.
138. சி.சிவசாந் - தம்பசிட்டி
139. க.அனுசியன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
140. பா.கேபேட்றுமேஸ் -கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
141. சி.சிவராம் - யா/காசிநாதர் வித்தியாலயம்.
142. ஆ.சேந்தன் - உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
143. சி.கிசோன் - உடுவில் மகளிர் கல்லூரி.
144. ச.அனுசா - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
145. சி.கௌதமி - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
146. ந.சிந்துகா - சுன்னாகம் இராமநாதன் கல்லூரி.
147. ஜெ.கீர்த்தனா - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
148. ர.மயூரி - மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
149. த.தனுயா - யா/அருணாசலம் வித்தியாலயம்.
150. ச.பங்கஜன் - ஏழாலை அ.மி.த.க.பாடசாலை.
151. யு.ஜிவிந்தன் - நவாலி.
152. க.பாலசேனானி - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
153. சி.லக்சாயினி - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
154. நா. நளாயினி - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
155. இ.மிதுசன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
156. யோ.சிந்துஜா - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
157. சி.வர்ணன் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
158. இ.நிரோக்குமார் - சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.
159. செ.கஜேந்திரன் - யா/புனித பத்திரிசியார் கல்லூரி.
160. க.நிறோசன் சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாசாலை.

# அரச அச்சகம் தாக்கப்பட்டதற்கு தொழிற் சங்கங்கள் கண்டனம்

(கொழும்பு)

கடநத வெள்ளியன்று ஐக்கிய தேசியக் கட்சியால் ஏற்பாடு செய்யப்பட்ட குண்டர்களால் அரசாங்க அச்சகம் தாக்கப்பட்டதை பல்வேறு தொழிற் சங்கங்களும் கண்டித்துள்ளன.

அச்சகத்தின் மீதும் அங்கு கடமையாற்றிய அப்பாவி ஊழியர்கள் மீதும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை ஜனநாயக இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்பது தொடர்பான ஜனாதிபதியின் தீர்மானத்தை அவர் மீண்டும் பரிசீலனை செய்தல் வேண்டும். ஜனாதிபதிக்கும் பிரதமருக்கு இடையிலேற்பட்ட மனஸ்தாபத்தை நீக்க வேண்டும என்றும் வாசுதேவ தெரிவித்துள்ளார்.

இதேவேளை அபிவிருத்து லொத்தர் சபையை பொறுப்பேற்றது சட்டவிரோதமானது என்று கூறுவதற்கு காரணம் எதுமில்லை என்று ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

மேலும் இது பற்றி ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச கூறுகையில், இவ்வாறான நடவடிக்கைக்கு ஜனாதிபதியிடம் அரசியல் சட்ட யாப்புப்படி அதிகாரம் இருக்கிறது. ஜனாதிபதியின் இச்செயல் அரசியல் சட்டத்திற்கு முரணனது என்று அரசாங்கம் கருதினால் அதற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். அடாவடித்தனங்கள் புரியக் கூடாது என்று தெரிவித்துள்ளார்.

(உ)

## வினாத்தாள் 14இன் விடைகள்

01. கம்பியூட்டர்.
02. கணனி, கணிப்பொறி.
03. அங்காடி.
04. அதிசயம்.
05. கல்விஅறிவுள்ளோர், கல்வி அறிவில்லாதோர்.
06. Years
07. இறந்த காலத்தில்
08. 100 வருடங்கள்
09. அருவம்.
10. மனம்.
11. அழுகை.
12. சந்தோசம்.
13. ஏமாற்றம்.
14. கோபம்.
15. மது அருந்துதல்.
16. மது அருந்துதல், புகைப்பிடித்தல்
17. 3
18. 3
19. 3
20. 2
21. 2
22. 2
23. 7
24. 1
25. 2
26. 6
27. 8
28. 4
29. 3
30. 9
31. 10
32. 2
33. 2
34. 2
35. 3
36. 3
37. 20.5cm
38. 20.5cm
39. 55cm
40. 112cm²
41. 212
42. 2120/=
43. 100
44. 31.20/=
45. 4
46. 21 நாட்கள்
47. 17
48. அதிபர் காரியாலயம்.
49. வகுப்பறை.
50. நூலகம்.
51. ஆய்வுகூடம்.
52. விளையாட்டு மைதானம்.
53. வீட்டைக்காக்கும்.
54. வண்டி இழுக்கும்
55. கழிவுகளை உண்ணுதல்
56. 2
57. 4
58. 3
59. 4
60. 2
61. 1
62. துக்கம்
63. அபாயம்
64. தொற்றுநோய்கள்
65. நீதி
66. வைத்தியசாலை மருத்துவ உதவி.
67. ஈட்டி எறிதல்
68. குண்டெறிதல்.
69. ஓட்ட ஆயத்தம்.
70. ஒலிம்பிக் தீபம்.
71. Head
72. Hand
73. Bag
74. Foot
75. Leg

76-81 வரையிலான வினாக்களுக்கு பொருத்தமான எழுவாய், பயனிலையுடன் அமைந்த 6 வாக்கியங்கள் எழுதப்படல் வேண்டும். ஒவ்வொரு வாக்கியமும் ஆகக் குறைந்தது 4 சொற்களையாவது கொண்டிருத்தல் வேண்டும்.

# பாடசாலைகள் புனரமைப்பில் பாரபட்சம்?

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் மக்கள் மீளக் குடியமர்ந்து வருவதையடுத்து, அங்குள்ள பெரும்பாலான பாடசாலைகளை புனரமைக்கும் பொறுப்பை நிக்கோட் நிறுவனம் ஏற்றுள்ளது.

இதேவேளை, ஆழியவளை சி.சி.த.க. வித்தியாலயமும், தாழையடி றோ.க.த.க வித்தியாலயமும், திருத்துவதற்கான எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கபபடவில்லை எனவும் இதனால இவ்விரு பாடசாலைகளிலும் மாணவர்களுக்கு கல்வி புகட்டுவதில் பாடசாலை நிர்வாகம் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்.வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயமும், உடுத்துறை, மகாவித்தியாலயமும் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(உ- 42,10)

## சிறுவிளம்பரம்

### தேவை

பட்டயக்கணக்காளர் நிறுவனம் ஒன்றிற்கு கணக்காய்வு பயிலுநர், உதவியாளர் தேவை.

க.பொ.த. உயர்தர பரீட்சையில் சித்தியடைந்தோர் விண்ணப்பிக்கலாம். அனுபவமுடையோர் விரும்பத்தக்கது. எம். இராஜநாயகம் அன்கம்பனி 140, பலாலி வீதி, திருநெல்வேலி (பரமேஸ்வராச் சந்தி).

T.P.No:222 2478 (6951)

### விற்பனைக்கு

சாப் (Sharp)அவுட் ஓடியோ, வீடியோ CD 200W கறுப்பு (Black) செற்விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ரஜிதீபன் குமரகோட்டம், கோண்டாவில் (சனசமூக நிலையத்திற்கு அருகாமையில்). (6953)

## முள்ளியான் உப அலுவலகம் இயங்குகிறது

(திருநெல்வேலி)

கடந்த 12வருடங்களின் பின்னர், வெற்றிலைக்கேணி முள்ளியான் உப அஞ்சல் அலுவலகம் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது.

நேற்று முன்தினம் இதன் ஆரம்ப விழா மேற்படி உப அஞ்சல் அலுவலகப் பொறுப்பாளர் எஸ். ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை, கடற்புலிகளின் வடமராட்சிப் பொறுப்பாளர் தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-43)

## வெடிக்காத நிலையில் எறிகணை மீட்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி ஓடக்கரை சனசமூக நிலையம் அருகில், தொலைதொடர்பு விஸ்தரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ரெலிக்கொம் நிறுவனத்தினர் வெடிக்காத நிலையில் எறிகணை ஒன்றினை கண்டுபிடித்துள்ளனர்.

மேற்படி பகுதியில் கிடங்கு ஒன்றினை வெட்டிய வேளை புதையுண்ட நிலையில் காணப்பட்ட எறிகணை குறித்து உடனடியாகவே இராணுவத்தினருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது.

இதனையடுத்து அவ்விடம் விரைந்த படையினர் எறிகணையை மீட்டுச் சென்றுள்ளனர். (உ-43)

# ஜனாதிபதியுடனான முரண்பாட்டைக் களைய சமரசமான பேச்சு வார்த்தைக்குத் தயார்

## வெளிநாட்டு இராஜ தந்திரிகளிடம் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையே எழுந்துள்ள சகவாழ்வு நெருக்கடி தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் உள்ள வெளிநாடுகளின் ராஜ தந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

ஜனாதிபதி அரசாங்கத்துடன் ஒத்துழைக்கத் தவறியுள்ளதாக பிரதமருடன் இணைந்து அமைச்சர்கள் ஜீ.எல். பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரும் இராஜதந்திரிகளுக்கு விளக்கமளித்துள்ளனர்.

ஐ.தே.மு. அரசாங்கத்தின் பொறுப்புக்களை பொறுப்பேற்கும் ஜனாதிபதியின் செயலால் சமாதான முன்னெடுப்புக்கள் மோசமான முறையில் பாதிக்கப்படக்கூடிய ஆபத்து உள்ளது என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

1994இல் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க அமைச்சரவையை அமைத்தபோது ஐ.தே.கவின் ஜனாதிபதியே பதவியிலிருந்தார்.

அவர் அமைச்சரவை நடவடிக்கைகளில் தலையீடு செய்யவில்லை. இன்றைய ஜனாதிபதியும் அவ்வாறான ஒரு நிலைப்பாட்டையே பின்பற்றவேண்டும் என்பதையும்,

இதேவேளை, தான் இப்போதும் கூட ஜனாதிபதியுடன் சமரசமான அடிப்படையில் இவ்விவகாரத்தைப் பேசித் தீர்த்துக்கொள்வதற்கு தயாராக இருப்பதாகவும் பிரதமர் வெளிநாட்டு இராஜதந்திரிகளிடம் தெரிவித்துள்ளார். (உ)

## கண்டி மிலேனியம் சிற்றி ஆயுதங்கள் மீண்டும் இராணுவத்திடம் ஒப்படைப்பு

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றியின் வீடொன்றில் இருந்து கண்டெடுக்கப்பட்ட ஆயுதங்கள் மீண்டும் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டன.

கடந்தவருடம் ஜனவரி மாதம் இப்பகுதி வீடொன்றை கண்டிப் பொலிஸார் சோதனை இட்டபோது இவ் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவ் ஆயுதங்கள் விசேட அதிரடிப்படையினரால் பாதுகாக்கப்பட்டு நீதிமன்ற உத்தரவின்பேரில் இராணுவத்தினரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டன.

இவ் வீட்டை இராணுவத்தின் புலனாய்வுப் பிரிவினர் பயன்படுத்தி வந்தனர் என்பது விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. (தி)

## காற்றுடன்கூடிய கடும் மழை நேற்று

(திருநெல்வேலி)

நேற்று காலை வீசிய கடும் காற்றுடன் கூடிய மழை காரணமாக வடமராட்சிப்பகுதியில் பெரும் சேதம் ஏற்பட்டுள்ளது.

கடலில் இருந்த கடற்றொழில் உபகரணங்கள் பலவும் நீரினால் அடித்துச்செல்லப்பட்டுள்ளதால் இடம்பெயர்வின்பின் மீளத் தொழிலை ஆரம்பித்த மீனவர்கள் கையறு நிலை அடைந்துள்ளனர்.

இதேவேளை, படையினரின் சோதனைச்சாவடிகளும் வாடிகள், வீடுகள் என்பனவும் சேதமடைந்துள்ளன. (உ-43)

## மாட்டு இறைச்சி பறிமுதல்

(யாழ்ப்பாணம்)

நேற்று வண்ணார்பண்ணை நாவலர் வீதியில் சட்டவிரோதமாக மாடுகள் இறைச்சிக்காக வெட்டப்பட்டமை குறித்து, பொதுமக்கள் கொடுத்த தகவலை அடுத்து, சுகாதார மேற்பார்வையாளர் பிரான்சிஸ் இயேசு குமாரநாதன் மாட்டு இறைச்சியைக்கைப் பற்றியுள்ளார்.

மாடு வெட்டப்பட்ட இடத்தை பிரதம பொதுச் சுகாதார பரிசோதகர் ஆ.ஜீவநாதன், சுகாதார மேற்பார்வையாளர் சி.சிவராஜேஸ்வரன் ஆகியோரும் பார்வையிட்டனர். (உ-3)

## ஜனாதிபதி சந்திரிகா வசமுள்ள அபிவிருத்தி லொத்தர் சபையைக் கைமாற்ற முற்பட்டால் நாடாளுமன்றம் கலைக்கப்படும்

### எதிர்கட்சித் தலைவர் எச்சரிக்கை

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதியிடம் இருந்து மீண்டும் பொறுப்பேற்பதற்கு அரசு முற்படுமானால் ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கவேண்டி ஏற்படும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கொழும்பில் செய்தியாளர்களைச் சந்தித்து விளக்கமளிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி லொத்தர் சபை ஜனாதிபதி பொறுப்பேற்கும் தீர்மானத்துக்கு பொ.ஐ.ஐக்கிய முன்னணியின் நிறைவேற்றுச்சபை ஆதரவு தெரிவித்துள்ளதுடன், எதிர்வரும் காலத்தில் எடுக்கப்படும் எந்தத் தீர்மானத்திற்கும் அச்சபை அங்கீகாரம் வழங்கவுள்ளது.

அபிவிருத்தி லொத்தர் சபையை பொறுப்பேற்பதற்கான தீர்மானம் அரசியல் தீர்மானம்அல்ல. அது தேசிய முக்கியத்துவத்தின் அடிப்படையில்



எடுக்கப்பட்ட தீர்மானம். இதனை எதிர்ப்பவர்கள் தேவையானால் நீதிமன்றத்துக்கு செல்லலாம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-5)

## வடமராட்சிப் பகுதி மீனவர்களின் படகுகள் உடைக்கப்பட்டு பரிசோதனை

(திருநெல்வேலி)

கற்கோவளம் முதல் தொண்டைமானாறு வரையான கடற்பகுதியில்கடற்றொழில்புரியும் மீனவர்களின் படகுகளைப் பரிசோதிக்கும் நடவடிக்கையில் கடந்த இரு தினங்களாக வடமராட்சி பகுதி படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த 7ஆம்திகதி வல்வெட்டித்துறை கடற்கரைப்பகுதியில் இருந்து வெடிப்பொருட்கள் நிரம்பிய படகு ஒன்று மீட்கப்பட்டதை அடுத்தே இந்தப் புதிய நடவடிக்கை ஆரம்பமாகியுள்ளது.

படகுகளையும் படகு உரிமையாளர்களையும் தமது முகாமுக்கு அழைக்கும் கடற்படையினர் படகு களை பரிசோதிப்பதுடன் தேவை யேற்படின் அதனை உடைத்தும் பார்க்கின்றனராம்.


இதனால் படகை மீண்டும் பொருத்தும் செலவை கடற்படையினரே ஏற்கவேண்டும் எனவும் அவ்வாறு இல்லாவிட்டால் இதற்கு தாம் ஒத்துழைக்கப்போவதில்லை எனவும் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் சமாசம் படைத்தரப்பை கோரியுள்ளது.

படகின் உரிமையாளர் ஒவ்வொருவரும் தமது படகு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்படாது என்பதை கடிதமூலம் உறுதிப்படுத்தினால் தாம் இந்த நடவடிக்கையை கைவிடுவதாக படைத்தரப்பு பதிலளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (உ-43)

## துண்டுப் பிரசுரம

(பளை)

டெங்கு காய்ச்சல் விழிப்புணர்வு பிரசாரத் துண்டுப் பிரசுரங்களை சுகாதார திணைக்களத்தின் தொற்றுநோய் தடுப்புப் பிரிவு வெளியிட்டுள்ளது. (உ-97)



பச்சிளைப்பள்ளி பிரதேச சபையில் அண்மையில் இடம் பெற்ற பிரிவு உபசார விழாவில் பச்சிளைப்பள்ளி பிரதேச சபையின் புலோப்பளை உப அலுவலகப் பொறுப்பதிகாரி இ. செல்வநாதன் உரையாற்றுவதையும் பிரதேச சபை இ.து. சிவராஜா ஆயுள்வேத மருத்துவ உத்தியோகத்தர் திருமதி சிவசுதன், செல்வி ஐ.மஞ்சுளா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம். படம்:இ.செல்வநாதன்



இரண்டாவது உலக இந்து மாநாடு தொடர்பில் கட். நெ. ப.நோ.கூ. சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட ஊர்திப் பவனியில் பங்கேற்ற, சங்கப்பணியாளர்கள், பணிப்பாளர்களைக் காணலாம்.

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையின் சுகாதாரப் பிரிவினரால், யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் உள்ள வளர்ப்பு நாய்களுக்கு 3ம் கட்டமாக தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அதன்படி எதிர்வரும் 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30மணிமுதல் 12.30மணிவரை வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவிலடியில் உள்ள காமாட்சி சனசமூக நிலையத்திலும் பி.ப.2மணிமுதல் 4.30மணிவரை கந்தர்மடம் அரசடி வீதியில் உள்ள அங்கா பாமசியிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

மறுநாள் புதன்கிழமை நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்திலும்,

22ஆம் திகதி வியாழக்கிழமை கல்வியங்காடு வன்னியசிங்கம்பொதுப்பணி மன்றத்திலும் நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (உ-10)

## கடந்த மூன்று மாதங்களில் 1400 சிறுமிகள் மீது பாலியல் துஷ்பிரயோகம்

(கொழும்பு)

நாட்டில் அண்மைக்காலங்களில் கொலை, கொள்ளை, தற்கொலை கடத்தல், பாலியல் வல்லுறவு மற்றும் சம்பவங்கள் அதிகரித்திருப்பது புள்ளி விபரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. கடந்த மூன்று மாதங்களில் மட்டும் நாட்டில் 304 கொலை, தற்கொலைச் சம்பவங்களும் 215 கடத்தல் சம்பவங்களும் 287 பெண்கள் மீதான பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் ஆயிரத்து 357 கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, கடந்த ஒரு வாரத்தில் கொழும்பில் மட்டும் 8 கொலைகள் இடம் பெற்றுள்ளன.

கடந்த புதன்கிழமை மட்டும் நான்கு கொலைகள் இடம் பெற்றுள்ளன. இதில் இரண்டு கோடீஸ்வர வர்த்தகர்கள் அடங்குகின்றனர். இதேவேளை, ஒரு வர்த்தகரின் இரு பிள்ளைகளும் கொலை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்து இன்று வரையான காலத்தில் நாடளாவிய ரீதியில் 15 கொலைகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் நாட்டின் ஒழுங்குகள் சீர்குலைந்திருப்பதையே காட்டுகிறது என மனித உரிமை ஆர்வலர்கள் கவலை வெளியிட்டிருப்பதுடன், பொதுமக்கள் தமது பாதுகாப்பிற்கு உறுதியில்லை என்று விசனமடைந்துள்ளனர்.

இதேவேளை, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தகவல் ஒன்றின் படி 3 மாதங்களுக்குள் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் 18 வயதுக்குட்பட்ட ஆயிரத்து 400 சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்குட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 10 வயதுக்குட்பட்ட 288 சிறுமிகள் அடங்குவர்.

தந்தைமாரின் பாலியல் பலாதகாரங்களுக்குட்பட்டுள்ள 200சம்பவங்களும் பொலிஸ் புள்ளிவிபர புத்தகங்களில் பதிவாகியுள்ளன.

இவ்வாறான சட்டவிரோத செயல்கள் அதிகரிப்புக்கு போதைவஸ்து காரணமாய் உள்ளதென, பொலிஸ் போதைவஸ்து பணியகத்தின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பூஜித்த ஜெயசுந்தர தெரிவித்துள்ளார்.

இவ்வாறான செயற்பாடுகள் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமையும் எனவும் அஞ்சப்படுகிறது. (உ-8)

## இன்று ஒரு தகவல்

# பிறர்மேல் பழிசுமத்தல்

இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான ஆசை. ஒரு ராஜாவுக்கு ஒரு விநோதமான ஆசை. ஆது என்னவென்றால், விதம் விதமான விசிறிமட்டைகளை வாங்கிச் சேகரித்து வைக்கவேண்டும் என்பதே. இப்படி எங்கே போனாலும் விசிறிமட்டைகளையே வாங்கிவந்து சேர்த்து வைத்துக் கொண்டிருந்தார். ஒருநாள் தெருவழியாக ஒருவன் விசிறிமட்டை விற்றுக்கொண்டு போய்க் கொண்டிருந்தான். இவர் அதனைக்கண்டார். சும்மா இருப்பாரா? உடனே அந்த ஆளை அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டு வரச் சொன்னார். விசிறி விற்கிறவனும் வந்தான். 'உன்னிடம் விசேஷமான விசிறிமட்டை ஏதாவது இருக்கிறதா? அப்படி இருந்தால் கொடு' என்றார்.

'அரசே! என்னிடம் இருக்கிற விசிறிமட்டை எல்லாமே மிகவும் விசேஷமானவைதான். பார்ப்பதற்கு மிகவும் சாதாரணமாகத தான் தெரியும், இருந்தாலும் இதன்தரம் மிகவும் உயர்வு. ஆதலினால் ஒரு விசிறிமட்டையின் விலை நூறுரூபா' என்றான அந்தஆள். ராஜாவுக்கு ஆச்சரியம். 'என்னப்பா இது! பார்த தால் பத்துக்காசு கூடப் பெறாதுபோல இருக்கிறது. இதற்குப் போய் நூறுரூபா விலை சொல்கிறாயே! அப்படி என்ன விசேஷசம் இதிலே!' என்றார்.

'மன்னா உங்களிடம் பொய்சொல்லி நான் ஏமாற்ற முடியுமா? எனக்கு ஏது அவ்வளவு தைரியம்? இந்தவிசிறி மட்டையில உள்ள விசேஷசம் என்னவென்றால் இது நூறுவரிசம் உழைக்கும். அதற்கு நான் உத்தரவாதம் கொடுக்கிறேன்' என்றான். அப்படிஎன்றால் அந்த விசிறியை வாங்குங்கள் என்று உத்தரவு போட்டார் ராஜா. அரண்மனையில் அதை நூறு ரூபா கொடுத்து வாங்கிக்கொண்டார்கள்.

இருந்தாலும் ராஜாவுக்கு மனதிற்குள் ஒரு சந்தேகம். கொஞ சம் யோசித்தா. பின்பு அந்த ஆளைப்பார்த்து 'இதோ பாரபபா... இன்றிலிருந்து நான் இந்த விசிறி மட்டையை உபயோகப் படுத்தப் போகிறேன். நீ எதற்கும் ஒருவாரம் கழித்து என்னை வந்து பார்க்கவேண்டும' என்றார். சரி என்று ஒத்துக் கொணடான் இவன். ராஜா அந்தவிசிறிமட்டையை எடுத்து தினமும விசிறிக்கொண்டே வந்தார். மூன்று நாட்களிலேயே அந்த விசிறயின் நடுக்குச்சி வெளியேவந்துவிட்டது. அடுதத மூன்று நாட் களில மிகுதி விசிறிமட்டையும் விணாகப்போய்விட்டது. 'ஆகா! ஏமாந்து விட்டோம். அந்த ஆள் இனிமேல அரண்மனைப்பக்கம் வரமாட்டான' என்று நினைத்தார் ராஜா. ஆனால் அந்த ஆள் சொன்னபடியே சரியாக ஒருவாரத்தில் திரும்பி வந்தான். ராஜாவைப்பார்த்தான். அவர் கோபமாகஇவனைப் பார்த்தார்.

'என்னப்பா... என்னிடமே விளையாடுகிறாயா? உன்னுடைய விசிறிமட்டை நூறுவரிஷம் உழைக்கும் என்று சொன்னாய். ஒரு வாரத்திற்குள்ளேயே ஒன்றும் இல்லாமல் போயவிட்டது. ராஜாவை ஏமாற்றினால் என்ன தண்டனை தெரியுமா?' என்றார். 'அரசே! அப்படி நினைக்காதீர்கள் நான் ஒன்றும் தப்புப்பண்ணவில்லை. மன்னருக்கு விசிறி மட்டையை உபயோகிப்பது எப்படி என்று தெரியாது போல் இருக்கிறது. முறையாகவும், சரியாகவும் உபயோகப்படுத்தினால் இது நூறுவருஷம் கண்டிப்பாக உழைக்கும' என்றான்.

'என்ன எனக்கு விசிறவும் தெரியாது என்று சொல்கிறாயா?' என்று வேகமாகக் கேட்டார் ராஜா. 'தயவுபண்ணி நீங்கள் எப்படி விசிறினீர்கள் என்று சொல்லுங்கள்' என்று கேட்டான் இவன். 'இப்படித்தான் விசிறினேன்' என்று எல்லோரும் விசுறுவது மாதிரி விசிறிமட்டையை எடுத்து விசிறிக்காட்டினார் ராஜா. 'சரிதான். இப்பொழுதுதான் என்னதப்பு நடந்ததென்பது எனக்கு புரிந்துவிட்டது. இந்த விசிறி மடடையை நீங்கள் உபயோகப்படுத்த வேண்டிய முறையே வேறு' என்றான் அந்த ஆள். 'எப்படி உபயோகப்படுத்த வேண்டும் என்று ராஜா ஆர்வமாகக் கேட்டார். அந்தஆள் அதை விளக்க ஆரம்பித்தான்.

'விசிறி மட்டையை எடுத்து நமது முகத்திற்குமுன் ஒரு கையில் அசையாமல் பிடித்துக்கொள்ள வேண்டும். நமது தலையை மட்டும் அப்படியும், இப்படியும் ஆட்டவேண்டும். விசிறி மட்டையை ஆட்டக்கூடாது. நீங்கள் விசிறியை ஆட்டியிருககிறீர்கள். அதுதான் வீணாகப் போய்விட்டது. அதனால் தப்பு என்விசிறிமேல் இல்லை. உங்கள் மீதுதான் தப்பு' என்றான். இன்று உலகம் இப்படித்தான் போய்க் கொண்டிருககிறது. நாம் செய்கின்ற தப்புக்கு மற்றவர்கள்மீது பழியைப் போடுகிறோம். தவறுகளை நியாயப்படுத்த ஆரம்பிக்கிறோம்.

ஒருவன் அப்படித்தான் புதிதாக ஒரு கார் வாங்கினான் ஓட்டக் கற்றுககொண்டான். ஒரு புளியமரத்தில் கொண்டு போய் மோதிவிட்டான். 'என்னடா இப்படிப் பண்ணி விட் டாயே?' என்று கேட்டால் 'என்மேல் தப்பு இல்லை ஐயா! நான் நேராகத்தான் வந்துகொண்டிருந்தேன். எல்லாரும் விலகினார்கள். இந்தப் புளியமரம்மட்டும் விலகவில்லை. அதனாலே தான இப்படியாகிவிட்டது' என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜனாதிபதிபிரதமரை சமரசம்செய்ய —சமயத் தலைவர்கள் முயற்சி—

(கொழும்பு)

அரசியற் சட்ட நெருக்கடியை தோற்றுவிக்குமென நம்பப்படுகின்ற அபிவிருத்தி லொத்தர் சபை பற்றிய விவகாரத்தில் பிரதமருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடுகளை சமரசம் செய்துவைக்கும் முயற்சியில சமயத்தலைவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

சௌமிய இளைஞர் ஸ்தாபகரும், வடக்கு-தெற்கு சமாதான பரிமாற்ற திட்ட அமைப்பாளரும் இ.தொ.க.முன்னாள் ஊடகப் பணிப்பாளருமான பி.அந்தோனி முத்து இதுபற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

சகல மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பின் தலைவரான வண.மாதம்பாகம அசாகி நாயக்க தேரர் தலைமையிலான குழுவினரே ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையில் சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள ளனர் என்று தெரிவித்தார்.

இதேவேளை, மாதம்பாகம அசாகி நாயக்க தேரர் தலைமையிலான அமைப்பே நிரந்தர சமாதானம் வேண்டி வேறுபல மதங்களினதும சமாதான குழுக்களுடன் இணைந்து தியான வழிபாட்டை கடந்த 14 மாதங்களாக மேற்கொண்டு வருகின்றது.

இதன் 95-வது நிகழ்வாக கடந்த சனியன்று புத்தளத்தில் மாவட்டச செயலர் ஜயலத் திஸாநாயக்க தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், புலிகள் டோக்கியோ மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டு மெனவும் அரசுடன் சமாதான பேச்சு வார்த்தையை தொடர வேணடும் எனவும் இவர் அழைப்பு விடுத்தமை குறிப்பிடத் தக்கது. (உ)

## இந்துமாநாட்டு சிறப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

இரண்டாவது உலக இந்துமாநாட்டையொட்டி பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையம் நடததும் சிறப்பு நிகழ்வு இன்று மாலை 5.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் இடம்பெறவுள்ளது.

இதில தமிழநாட்டிலிருந்துவருகை தந்துள்ள பேச்சாளாகளான சுந்தரேசன ,மதன் ஆகியோர் ஆன்மீகச் சொற்பொழவுகளை நிகழ்த்தவுள் ளனர். (உ)

## அக்கினிப் பெருமூச்சு

(யாழ்ப்பாணம்)

தே.தேவானந்தன் 'அக்கினிபெருமூச்சு' நாடகம் இன்று மாலை 4 மணிக்கு யாழ். பல்கலைக கழக கைலாசபதி கலையரங்கில் மேடையேறவுள்ளது. (உ)

## உதவி மருத்துவர் போராட்டம் நாடு முழுவதும் விஸ்தரிப்பு

(கொழும்பு)

மத்தியமாகாண பதிவுசெய்யப்பட்ட உதவி மருத்துவ அதிகாரிகளினால் ஆரம்பிக்கப்பட்ட வேலை நிறுத்தம் நேற்று நாடு முழுவதும் விஸ்தரிக் கப்பட்டுள்ளதாக உதவி மருத்துவ அதிகாரிகளின் சங்கத்தின் செயலாளர் மகிந்த லியனகே தெரிவித்துள்ளார்.

மத்தியமாகாண உதவி சுகாதார அமைச்சர் மேற்கொண்ட உதவி வைத்திய அதிகாரிகளின் இடமாற்றத்திற்கு எதிர்ப்புத் தெரிவிதது கடந்த 19ஆம் திகதி முதல உதவி வைத்திய அதிகாரிகள் பொது வேலைநிறுத்தமொன்றை ஆரம்பித்தனர்.

இதற்கு உரிய பதில் கிடைக்காதநிலையில் அடையாள வேலை நிறுத்தம் ஒன்றை நாடுமுழுவதும் நடைமுறைப்படுத்துவதாக அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நேற்றுமுன் தினம் மத்தியமாகாண சுகாதார அமைச் சுக்கு முன்னால் பதிவு செய்யப்பட்ட சுகாதார வைத்திய அதி காரிகள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தின் போது வைத்திய அதிகாரிகள் மீது மேற்கொளளப்பட்ட தாக்குதல் சம்பவத்தினால் பலர் படுகாயமடைந்து கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (தி)

## இராசி பலன்

14.05.2003

(சித்திரை 31, புதன்)

திரயோதசி பி.ப 2.37 வரை
சித்திரை பி.ப.4.59 வரை
இராகுகாலம் 11.53- 1.23
சுபநேரம் 4.23-5-53

**மேடம்.**
பொருட்சேர்க்கை, குடும்பசுகம், ஆரோக்கியம், செல்வாக்கு

**இடபம்**
பகைவர்நேசம், காரியசித்தி, செய்தொழில் மேன்மை, மனமகிழ்ச்சி

**மிதுனம்**
வியாபார விருத்தி, கௌரவக்குறைவு, குடும்பக்கவலை, காரியஇடையறு

**கடகம்**
உடல்நலக்குறைவு, கல்வியில் ஆர்வம், மாதா சுகம், பயந்தசுபாவம்

**சிங்கம்**
தடைப்பட்டகாரியம் கைகூடும், பணவருவாய், மனமகிழ்ச்சி, பிரயாண நன்மை

**கன்னி**
கடுமையான வார்த்தை, எடுத்த காரியம் தாமதம், பொருள்விரயம், திடீர் நன்மை

**துலாம்**
கௌரவம், முயற்சிகைகூடும், விருந்துபசாரம், நல்லமுயற்சி

**விருச்சிகம்**
மனக்கவலை, உறவினர் உதவி, காரிய அலைச்சல், சுபசெலவு

**தனுசு**
நல்ல வருமானம், காரியசித்தி, உறவினர்வருகை, நல்லசெய்தி

**மகரம்**
அதிகபிரயாசை, தொழில்நன்மை, நல்ல மனைவாசம், குடும்பசுகம்

**கும்பம்**
புதிய திட்டமிடல், மனப்பதற்றம், முயற்சிதாமதம், நிர்ப்பந்தம்

**மீனம்**
வாகனபயம், காரியத்தடங்கல், போசனசுகம், அதிகசெலவு

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்.

## மனித உரிமைகள் ஆ.கு.முயற்சியால் —படகின் இயந்திரம்— உரியவரிடம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2002ஆம் ஆண்டு கிளாலி கடற்பகுதியில் கடற்படையினால் வாங்கிச் செல்லப்பட்டு பின்னர் ஒப்படைக்கப்படாதிருந்த படகு இயந்திரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். இணைப பாளர் ருவான் சந்திரசேகர மேற் கொண்ட முயற்சியால் மீளளிக் கப்பட்டுள்ளது.

மேற்படி படகுஇயந்திரம் தொடர்பாக செய்யப்பட்ட முறைப்பாடு தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக் குழு வின் யாழ். இணைப பாளர் பலாலி படைத்தளத் திற்குச் சென்று நடத்திய விசாரணைகளை அடுத்தே 30 ஆயிரம் ரூபா பெறுமதியான இந்தப் படகு உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (உ-7)

## ஜி.ரி.சற்.நிறுவனத்தினால் இதுவரை பன்னிரு பாடசாலைகள் புனரமைப்பு

(தென்மராட்சி)

ஜி.ரி.சற்.நிறுவனத்தின் பாட சாலைகள் புனரமைப்புத் திட்டத்தின கீழ் இதுவரை பன்னிரண்டு பாட சாலைகள் பல லட்சம் ரூபா செல வில் புனரமைக்கப்பட்டுள்ளன.

இந்தவகையில் மட்டுவில் தெற்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கல வன் பாடசாலை, மட்டுவில் வடக்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், சென். தோமஸ பெண்கள் பாடசாலை, மெதடிஸ்த பெண்கள் உயர்பாடசாலை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி, சண்டிலிப்பாய் இந்துககல்லூரி, கோப்பாய் வடக்குறோமன் கத்தோலிகக பாடசாலை, நாவற்குழி மத்திய மகாவித்தியாலயம், திருநெல்வேலி றோமன் கத்தோலிக்க பாடசாலை, சுன்னாகம் மயிலிணை வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே புனரமைக்கபட்டவையாகும்.

இந்தச் செயற்றிட்டமூலம் ஜி.ரி. சற்.நிறுவனம் யாழ். குடாநாட்டு மாணவர்களின் கல்லி வளர்ச்சிக்கு வலுவூட்டிவருவது குறிப் பிடத்தக்கது. (உ-77)

## 524 படைத்தளபதியின் உத்தரவால் கப்பலில்இருந்து பொருட்கள் இறக்கும் பணி ஸ்தம்பிதம்

(திருநெல்வேலி)

கப்பலில் ஏற்றிவரப்படும் பொருட்களை இறக்கும்வகையில் வள்ளங்களை பருத்தித்துறை துறைமுகத்தில் கட்டிவைப்பதற்கு 524 வது படைத்தளபதி அனுமதி மறுத்தருப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து சம்பந்தப்பட்ட வள்ள உரிமையாளாகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது பாதுகாப்பு நடவடிக்கைகளின் பொருட்டு, 524 படைப் பிரிவின் புதிய தளபதி கடந்த இரு தினங களாக இப் புதிய நடை முறையை அறிமுகப்படுத்தி, சம்பந்தப்பட்ட 10 வள்ளங்களையும் இனங் காணப்பட்ட பிறிதோர்இடத்தல் கட்டிவைக்குமாறு பணித்திருந்தார்.

இதை எதிர்த்து சம்பந்தப்பட்ட வள்ள உரிமையாளர்கள் நடத்தி வரும் போராட்டத்தால் இரு தினங்களாக கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கும்பணியும் ஸ்தம் பிதம்பிதம் அடைந்துள்ளது.

இதேவேளை, சிற்றி 'ஒவ் லிவர் பூல் என்ற சரக்குக்கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தில் தரித்து நிற்பதும் இன்னொரு சரக்குக் கப்பல் இன்று வரவுள்ளதும் குறிப்பிடத் தக்கது.

துறைமுகப்பகுதியில் வள்ளங்களைக் கட்டுவதற்கு மீண்டும் அனுமதி வழங்கும்வரை தமது போராட்டம் தொடருமென சம்பந் தப் பட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

(உ-42)

*சீரிலும் சீரல்ல செய்யாரே சீரோடு*
*பேராண்மை வேண்டு பவர்.*
*– குறள்*

# வலம்புரி

## சுய கௌரவம் பார்க்கும் சதீஸ் நம்பியார்

உயர் பாதுகாப்பு வலயம் பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பித்த இந்திய முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியார் இப்பொழுது கொதிப்படைந்துள்ளார்.சதீஸ் நம்பியார் சமர்ப்பித்த அறிக்கைக்கு,பொது ஜன ஐக்கிய முன்னணியும்,தமிழ்க் கட்சிகளும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.

இக் கண்டனம் தெரிவித்ததில் மிகக் கூடியபங்கை, பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினரும்,ஜனாதிபதியின் ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமரே வகிக்கிறார். 'இரவல் புடைவையில் இது நல்ல கொய்யகம்' என்ற பழமொழியோடு தனது கண்டனத்தைத் தொடுத்த கதிர்காமர் கண்டபாட்டில் சதீஸ் நம்பியாரை விமர்சித்துள்ளார்.

அதாவது தமிழ்க் கூட்டமைப்பினர் தெரிவித்த கண்டனத்தை விட கதிர்காமரின் கண்டனம் உச்சஸ்தாயியில் ஒலித்திருக்கிறது.

இதனால் சதீஸ் நம்பியார் மனவேதனையடைந்துள்ளார். யுக்கோசுலோவாக்கியாவில் நற்பெயரோடு பணியாற்றிய எனக்கு இலங்கையில் கிடைத்த 'வசை பாடல்' மிகவும் வேதனையைத் தருகிறது.ஒரு மனிதனால் மிக உயர்வாகப் பாதுகாக்க வேண்டியது சுய கௌரவமாகும்.இந்த சுய கௌரவத்திற்கே இழுக்கு ஏற்படும் வகையில் இலங்கை அரசியல்வாதிகள் நடந்துள்ளார்கள் எந்தவித நிதியுதவியும் பெறாமல் எனது பட்டறிவை நடுநிலையோடு பகிர்ந்து கொண்டமைக்காக அவர்கள் எனக்குத் தந்த பரிசால் இந்தியாவுக்கு கௌரவக் குறைவு ஏற்பட நான் ஒருபோதும் அனுமதியேன்.

இதன் காரணமாக இலங்கையின் சமாதான முயற்சிக்கு உதவும் எனது பணியை மறு பரிசீலனை செய்யவுள்ளேன் என சதீஸ் நம்பியார் கூறியுள்ளார்.

உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய தனது அறிக்கைக்குக் கிடைத்த விமர்சனத்தால் அதிர்ந்து போன சதீஸ் நம்பியார் சுயகௌரவம் பற்றிப் பேசியுள்ளார்.ஆனால் அவர் ஒன்றை மறந்து விட்டார். உயர் பாதுகாப்பு வலய விவகாரம் என்பது தமிழ் மக்களின் அடிப்படை உரிமையோடு சம்பந்தப்பட்டது.மாஸ்லோவின் தேவை கோட்பாட்டில் அடிப்படைத் தேவைப்பாடே முதன்மை பெறுகின்றது அந்த அடிப்படைத் தேவையைக் கடந்து சமூக, பாதுகாப்புத் தேவையின் பிற்பாடே கௌரவத் தேவை ஏற்படுகிறது.இதனைப் புரிந்து கொண்டு செயற்படாத நம்பியார்,சுயகௌரவம் பற்றிப் பேசுவது இந்து தர்மம் தோன்றிய பாரதத்திற்கே பெரும் இழுக்காகும்.

ஒருவன் தனது அடிப்படைத் தேவைக்காக ஏங்குகிறபோது அது விடயத்தில் தலையிடும் இன்னொருவனோ தனது சுய கௌரவத்தில் மட்டும் கண்ணும் கருத்துமாக இருக்கிறான் எனில் அவன் மனிதத்தை இழந்தவனாகவே இருக்க முடியும்.

# ஜனாதிபதி சந்திரிகாவுக்கு எதிரான அரசியல் குற்றப்பிரேரணைக்கு தேவையான கையொப்பங்களை உடன் திரட்டமுடியும்

## அரசாங்கத்தின் அமைப்பாளர் மகிந்த சமரசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அனுமதி தருமிடத்து ஜனாதிபதிக்கு எதிரான அரசியல் குற்றப் பிரேரணைக்கு அவசியமான 113 கையொபபங்களையும் சில மணி நேரங்களுக்குள் திரட்டிக் கொள்ள முடியும் என அரசாங்கத்தின் பிரதான அமைபபாளர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

அச் செய்தி நிறுவனத்துக்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட மகிந்த சமரசிங்க,

பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொள்ளும் நடவடிக்கைகளைத் தடுப்பது ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு அல்ல.

ஜனாதிபதி பாராளுமன்றத்தைக் கலைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டால்,நாம் தேவையான நேரத்தில் தேர்தலை எதிர்கொள்ள தயாராகவுள்ளோம்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் இதுவரை மேற்கொண்ட செயல்திட்டங்களை மேற்கொள்ளுமிடத்து, இனி நடைபெறவுள்ள துரித தேர்தலின் போது எம்மால் இலகுவாக மக்கள் ஆணையைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

இதேவேளை,விஞ்ஞானத் தொழில்நுட்ப அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கீழ் இருந்த அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி தனது அதிகாரத்தின் கீழ் பொறுப்பேற்ற நடவடிக்கையை ஒரு போதும் ஏற்கமுடியாது.

2007 ஆம் ஆண்டு வரை எமது அரசாங்கத்துக்கும் ஜனாதிபதிக்கும் கிடைத்துள்ள மக்கள் ஆணையை இருதரப்பினரும் ஏற்று நடக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (தி)

# இலங்கைத் தொழிலாளர் ஐ.மு. தனது தனித்துவத்தை இழக்காது

## செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணி, எக்காரணம் கொண்டும் வேறெந்தக் கட்சியுடனும் இணைந்து செயற்பட வேண்டிய அவசியமும் தேவையும் கிடையாது என கட்சியின் பொதுச் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். சதாசிவம் தெரிவித்துள்ளார்.

தலவாக்கொல்லையில் நேற்று முன்தினம், நடந்த கூட்டமொன்றில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய சதாசிவம், நானும, ரி.வி.சென்னனும் வேறொரு கட்சியுடன் இணைந்து செயற்படப் போவதாக பரவிய செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை. நாம் எக்காரணம் கொண்டும் வேறொரு கட்சியுடன் இணைந்து மலையக மக்களை தவறான பாதைக்கு இட்டுச் செல்ல மாட்டோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# பளைப் பகுதியில் டெங்கு நுளம்பு ஒழிப்பு

(பளை)

பளைநகர் மையப்பகுதி மற்றும் இயக்கச்சி,முகமாலை ஆகிய இடங்களில் அண்மையில் டெங்கு நுளம்பு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரியின் வழிகாட்டலில் பளைப் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர்,தொண்டர்கள் ஆகியோர் வன்னி வைத்திய பூச்சியியல் குழுவினர் ஒத்தாசையுடன் இப் பணியை மேற் கொண்டனர்.

வீடு வீடாகச் சென்ற இக் குழுவினர் டெங்கு நுளம்பு குடம்பிகளை இனம் கண்டு அழித்ததுடன் நுளம்பு பெருகும் ஏதுக்களையும் இல்லாது செய்தனர். (உ-97)

# மட்டு மாவட்டத்தில் மீண்டும் இரவு பகல் ரோந்து நடவடிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் இராணுவத்தினர் மீண்டும் தமது ரோந்து நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

மட்டக்களப்பு நகரவீதிகளிலும், கிராமப்புறங்களிலும் இரவிலும் பகலிலும் படையினர் ரோந்து நடவடிக்கையை மேற் கொண்டு வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பில் அண்மைக் காலமாக இடம் பெற்றுவந்த படுகொலைச் சம்பவங்களை அடுத்ததே இந்த ரோந்துப் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பும் பலப்படுத்தப்பட்டு வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இராணுவத்தினர் திடீரென இரவு பகலாக மேற் கொண்டு வரும் இவ்வாறான ரோந்துப் பணிகள் காரணமாக அப்பகுதி மக்கள் மத்தியில் பதற்றநிலை தோன்றியிருப்பதாகவும் கூறப்படுகிறது. (த)

# யா.இ.ம.கல்லூரியில் மனை முகாமைத்துவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் கல்லூரியில் கல்விகற்கும் பாடசாலையை விட்டு விலகிய மாணவிகளுக்கு முறைசாரக்கல்வி பிரிவில் மனை முகாமைத்துவம், கணனி ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன

இப்பயிற்சி நெறிகளை மேற்கொள்ளவிரும்புவோர் தமது விண்ணப்பங்களை இம்மாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் கல்லூரி அலுவலகத்தில் சமர்பிக்குமாறு கல்லூரி அதிபர் திருமதி எஸ்.ஜெயராஜா கேட்டுள்ளார். (ந-5)

# தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்

## ஜே. வி. பி. ஜனாதிபதிக்கு கடிதம்

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் விடுதலை முன்னணி, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிடம் கடிதம மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜனாதிபதிக்கு மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் மக்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு கடற்பிராந்தியத்தை ஒதுக் கிக் கொடுத்தல்,அதி உயர் பாதுகாப்பு வலயங்களை விலக்கிக் கொளளல் போன்ற அரசாங்கத்தின் நடவடிக்கைகளை உடன் நிறுத்த வேண்டும்.

அரசின் இவ்வாறான நடவடிக்கைகளால் நாட்டின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதுடன், இந்து சமுத்திரத்தில் இருக்கும் இந்தியா உட்பட பல நாடுகளுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது என அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி)

# திருவள்ளுவர் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கருணையம்பதி இளைஞர் முன்னேற்றக் கழகம் நடாத்தும் 17 ஆவது திருவள்ளுவர் திருவிழா நாளை வியாழக்கிழமை மாலை 5.00 மணிக்கு கருணையம்பதி சனசமூகநிலைய முன்றலில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களின் நிகழ்வுகள் சிறப்புச்சொறபொழிவுகள்,கவியரங்குகள்; பட்டிமன்றம் மற்றும் இசை நிகழ்ச்சி என்பன இடம் பெறவுள்ளன (ந-5)

# யாழ்ப்பாண ரயில் சேவை குறித்து இந்தியப் பிரதிநிதிகள் ஆராய்வு

(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கான ரயில் சேவையை ஆரம்பிக்கும் திட்டத்தை ஆராயவென நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் விஜயம் செய்த இந்திய அரசாங்கத்தின் ரயில்வே பிரதிநிதிகள தெல்லிப்பழையிலிருந்து பளை வரையிலான பாதையைப் பார்வையிட்டனர்.

இவர்கள் யாழ்.ரயில் பாதையை ஆரம்பிப்பதற்கான செலவுத்திட்டத்தினை அடுத்தவாரம் கையளிக்கவுள்ளனர்.திட்டம் கையளித்தவுடன் பாதை அமைப்பதற்கான நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபடும்மென தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-8)

# வயலின் இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

தென்னிந்திய பிரபல மிருதங்க வித்துவான் ஏ.எஸ். இராமநாதனின் புதல்வன் சங்கீதபூஷணம் கலையரசனின் வயலின் இசையரங்கு இன்று மாலை 6.00 மணிக்கு இளங் கலைஞர் மன்றக் கலாமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கவிஞர் சோ.பத்மநாதன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சங்கீதபூஷணம் சு.கணபதிப்பிள்ளை கலந்துகொள்ள உள்ளார். (உ)

## தினசரி தியானம்

### நோக்கமும் குறிக்கோளும்

வழ்ந்தவரை மேலேற்றுவதும் குருடருக்கு வழிகாட்டுவதும் தன்னிடமுள்ளவற்றை பிறருடன் பங்கிட்டு கொள்வதும் துயருறுவோர்க்கு ஆறுதல் சொல்வதும் நோயுற்றோருக்கு உற்சாகம் ஊட்டுவதும் உங்கள் குறிக்கோள்களாக அமைய வேண்டும். பிறகு இறைவனிடம் முழுமையாக பக்தியும் ஆண்டவனை நேசிப்பது போல அண்டையில் உள்ளாரை நேசிப்பதும முழுஊக்கத்துடனும் ஆற்றலுடனும் கடவுளிடம் பக்தி செலுத்துவதும் பசுக்களையும் விலங்குகளையும் குழந்தைகளையும் பாதுகாப்பதும் உங்கள் நோக்கங்களாக அமைய வேண்டும்.

சுவாமி சிவானந்தர்

# அரச வர்த்தமானி அறிவிப்பை வெளியிட மேலிட உத்தரவிற்காக காத்திருப்பு

(கொழும்பு)

அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா பொறுப்பேற்றது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு மேலிட உத்தரவு கிடைக்கும் வரை காத்திருப்பதாக அரசாங்க அச்சகர் நெவில் நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசன் ஜனாதிபதிக்கு அறிவித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவிக்குள்ளார்.

இதேவேளை அபிவிருத்தி லொத்தர் சபையை ஜனாதிபதி பொறுப்பேற்றது தொடர்பான உத்தரவில் ஜனாதிபதி கைச்சாத்திட்டது முதல் அது செல்லுபடியாகும் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கும் உத்தரவை அமுல்படுத்துவதற்கும் எதுவித தொடர்புமில்லை என ஜனாதிபதியின் ஊடகப் பேச்சாளர் ஜனதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார். (தி)

# இராணுவ வாகனம் மோதி பொலிஸ் உத்தியோகஸ்தர் பலி

## சாவகச்சேரியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்தபோது இராணுவ வாகனம் ஒன்று மோதியதில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்றுக்காலை 8.30 மணியளவில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்திற்கு அண்மையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் தம்புல்லையைச் சேர்ந்த பி.ஏ. நில்ரைறஸ் குலதுங்க (வயது 32) என்ற பொலிஸ் உத்தியோகஸ்தரே உயிரிழந்தவராவார்.

ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் இவர் கடமை விடயமாக கொடிகாமம் சென்றுவிட்டு திரும்பிக் கொண்டிருந்தபோது சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை அண்மித்தவேளை எதிரே வந்த இராணுவ வாகனம் இவரை மோதியது. இச்சம்பவத்தின் போது படுகாயமடைந்த இவர் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரும் வழியில் உயிரிழந்தார்.

இவரது சடலம் நேற்று மாலை பிரேத பரிசோதனையின் பின் ஊர்காவற்துறைப் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது. சடலம் அவரது சொந்த ஊரான தம்புள்ளவிற்கு இன்று எடுத்துச் செல்லவுள்ளது.(ந-7)

### தவறிவிட்டது


சுந்தரலிங்கம்-ரமேஷ்குமார் என்பவரது தேசிய சேமிப்பு வங்கியின் ''இத்துருமித்துரு'' பாஸ் புத்தகம் 'சிவன் பண்ணை' வீதியில் உள்ள STCA கல்வி நிறுவனத்திற்கும் K.K.S.வீதியில் உள்ள காமாட்சி கபேக்கும் இடையில் தவறிவிட்டது. பாஸ் புத்தகத்தின் இல 'Im -06-00040 ஆகும். கண்டெடுத்தவர்கள் வலம்புரிப் பத்திரிகைக் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (C-6136)


# தாய்லாந்துப் பிரதமர் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

தாய்லாந்துப் பிரதமர் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். பிரதமருடன்அந்தநாட்டு வரலாற்று அமைச்சர், வர்த்தக அமைச்சர், கலாசாரவிவகார அமைச்சர், மற்றும் அரச அதிகாரிகளும், வர்த்தக பிரமுகர்களும் இலங்கை வருகிறார்கள்

இலங்கை வரும் இவர்கள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா, பிரதமர் ரணில்விக்கிரமசிங்கா ஆகியோரையும் மற்றும் முக்கிய அமைச்சர்களையும் இன்று சந்திக்கவுள்ளனர்.

மகாநாயக்க தேரர்களின் அழைப்பின்பேரில் இலங்கைக்கு வரவுள்ள தாய்லாந்துப் பிரதமரும் அவரது சக அமைச்சர்களும் கண்டி தலதாமாளிகைக்குச் சென்று விசேட வழிபாடு ஆராதனைகளையும் மேற் கொள்ளவுள்ளனர். (வ)

## தெல்லிப்பழையில் இன்று கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்குப் பகுதியில் மீள் குடியமர்வு சம்பந்தமாக ஆராயும் கூட்டம் ஒன்று இன்று பிற்பகல் 3மணிக்கு தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவருமான சிவமகாராசா தெரிவித்துள்ளார்.(த)

### கண்டி...

திகதி வழங்கப்பட்ட 22387-வது இலக்கப் பற்றுச் சீட்டு என்னாலேயே எழுதப்பட்டது.எம். தர்மலிங்கம் மற்றும் ஒருவரது பெயரும் வாகனமொன்றும் புத்தகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

1998ம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் திகதி 22427 இலக்கப் பற்றுச் சீட்டின் பிரகாரம் ரவீந்திரன் மற்றும் அவரது இரு சகாக்கள் 13-1396 வாகனம் ஆகியவற்றுக்கான பற்றுச் சீட்டுகளும் பதிவுப்புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ரவீந்திரன், கே. இராமச்சந்திரன், தர்மலிங்கம் ஆகியோரது தேசிய அடையாள அட்டை இலக்கங்களும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

தர்மலிங்கம், இராமச்சந்திரன் ஆகியோர் ஜனவரி மாதம் 12ம் திகதிக்குப்பின் 6 முறை இங்குவந்து தங்கியுள்ளனர் என்றார். (உ-8)

# யாழ்ப்பாணத்தில் நேற்றிரவு திடீர் சூறாவளி; கடும் மழை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாடு பூராகவும் நேற்று இரவு திடீர் மினி சூறாவளி இடி முழக்கத்துடன் கூடிய பலத்த மழை பெய்தது.

வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் வட திசை நோக்கி நகர்ந்து செல்வதன் காரணமாக குடாநாடு முழுவதையும் மினி சூறாவளி தாக்கியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று இரவு 11.10மணியளவில் கடும் காற்று இடி மின்னலுடன் பலத்த மழை காரணமாக பாரிய மரங்கள் சரிந்து விழுந்தன. பனை, தென்னை முறிந்து வீழ்ந்துள்ளன,பயன்தரு மரங்கள் அழிந்து நாசமாகியும் உள்ளன.

இரவு 11.10மணியளவில் ஆரம்பமான மினி சூறாவளி அதிகாலை 1.15மணிவரை நீடித்தது. இதே வேளை வடமராட்சியில் நேற்று அதிகாலை மினி சூறாவளியுடன் கூடிய பலத்த மழை பெய்துள்ளது.

இதன் காரணமாக உச்சில் அம்மன் ஆலயத்தில் தேர் முட்டி ஓடுகள் தூக்கி வீசப்பட்டுள்ளதுடன் வீட்டுக் கூரை ஓடுகளும் சேதமாகியுள்ளன.

அத்துடன் இம் மினி சூறாவளியின் தாக்கத்தினால் வடமராட்சியில் பல பயன்தரும் மரங்கள் முறிந்துள்ளன. இதேவேளை இச் சூறாவளி வடமராட்சியில் வல்வெட்டித்துறை,கரவெட்டி, பருத்தித்துறை, துன்னாலை, குடத்தனை, பொலிகண்டி ஆகிய இடங்களை தாக்கியுள்ளது. (த-7-4-44)

### யாழ்ப்பாணத்தில்...

சார்ஸ் நோய் அறிகுறிகளுடன் சிகிச்சைக்கான நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதை அடுத்து வைத்தியசாலை நிர்வாகத்தினர் உசார் அடைந்தனர்.

பிரஸ்தாப நோயாளி தனியாக அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். பிரஸ்தாப நபர் சார்ஸ் நோயினால் தான் பாதிக்கப்பட்டுள்ளாரா என்பது இன்னும் தெளிவாக உறுதிப்படவில்லை எனத் தெரியவருகிறது.

இது விடயம் தொடர்பாக யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் சதுர்முகனிடம் தொடர்புகொண்டு கேட்டபோது சார்ஸ் நோய் அறிகுறிகளுடன் நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெறுவதாகவும் சார்ஸ் நோய் தொற்றுவதற்கான ஏதுக்கள் குறித்தும் குடும்பப் பின்னணி குறித்தும் ஆராய்ந்த வகையில் அவ்வாறு சார்ஸ் நோய் தொற்றிக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்றும் தெரிவித்தார்.(த)

### அதிகாரத்துடன்...

இன்னமும் இயங்கத் தொடங்கவில்லை.

அடுத்த மாதம் 10-ம் திகதி ஜப்பானில் நடைபெறவுள்ள நிதியுதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகள் பங்கு கொள்வதற்கு முன்னதாக துரிதமான தீர்வாக நிதி மற்றும் சகல துறைகளிலும் போதிய அதிகாரங்கள் பெற்ற ஒரு அமைப்பு ஏற்படுத்தப் படவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் மிகவும் உறுதியாக உள்ளனர்.

வடக்கு கிழக்கில் உள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் மாற்றியமைக்கப்பட்டு மக்கள் மீளவும் இங்கு குடியமர்த்தப்படவேண்டும் என்ற கருத்துக்களும் அங்கு பறிமாறப்பட்டு வலியுறுத்தப்பட்டதுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு இவற்றிற்கு தன்னாலானவற்றை செய்யவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற விடுதலைப் புலிகளுடனான சந்திப்பின்போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எம்.பிக்களான இரா. சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராசா, அ. விநாயகமூர்த்தி, என். ரவிராஜ், சந்திரநேரு, தங்கவடிவேல், கிருஸ்ணபிள்ளை, துரைரட்ணசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், என்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோருடன் சுரேஸ் பிரேமச்சந்திரனும், விடுதலைப்புலிகளின் சார்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனும், துணைப்பொறுப்பாளர் எஸ். தங்கன், யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் இளம்பரிதி, வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலன், திருகோணமலை மாவட்ட பொறுப்பாளர் திலக், மட்டு அம்பாறைப் பொறுப்பாளர் கௌசல்யன், மன்னார் மாவட்ட பொறுப்பாளர் அமிதாப் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வி. ஆனந்தசங்கரி, செல்வம் அடைக்கலநாதன் இராசகுகணேஸ்வரன் ஆகியோர் இச் சந்திப்பில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.(ம)


திருமறைக்கலாமன்ற சிறுவர் கலைக்கூட, சிறுவர் சமாதான வலயங்களைக் சேர்ந்த சிறுவர்கள் பங்கும் கொள்ளும்

**சிறுவர் சமாதான பாசறை**

இரண்டாம் நாள்:15.05.2003 வியாழக் கிழமை
நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 7 மணிவரை
இடம்: வீரசிங்கம் மண்டபம்,யாழ்ப்பாணம்.

**நிகழ்வுகள்**

★சிறுவர் பாசறை
★சிறுவர் பாடல்களும்,விளையாட்டுக்களும்.
★சிறுவர்களுக்கான கலந்துரையாடல்.
★சிறுவர் கருத்துரை அமர்வு
(வள ஆளுனர்களாக பல்வேறு அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கு கொள்வார்கள்)
★சமாதானத்திற்கான சிறுவர் கலாசார எழுச்சி ஊர்வலம்
(மாலை 5.00 மணிக்கு பல்வேறு பிரதேச கலை வடிவங்களை நிகழ்தியவாறு யாழ்.நகர வீதிகளினூடாக சிறுவர்கள் ஊர்வலமாக வலம் வருவார்கள் )
நேரம்: இரவு 8.30 மணி முதல்
இடம்: மன்ற அரங்கு பிரதான வீதி,யாழ்ப்பாணம்
(யாழ்ப்பாணம்.கண்டி.இளவாலை.மாத்தறை.வன்னி.பண்டாரகம.வவுனியா.பிபில.மன்னார்.மொறத்துடுவ.திருகோணமலை.புத்தளம்.பல்பெல்ல.மட்டக்களப்பு மஸ்ரிய.கொழும்பு.ஹப்புத்தளை ஆகிய பிரதேச சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் பேச்சுக்களும் இடம் பெறும்.)

இலங்கையில் உள்ள அனைத்துத் திருமறைக்கலாமன்ற அங்கத்தவர்களும் பங்கு கொள்ளும்

**திருமறைக் கலாமன்ற மாநாடு**

மூன்றாம் நாள்:16.05.2003 வெள்ளிக் கிழமை
நேரம்: காலை 9.00 மணி முதல் மாலை 5 மணிவரை
இடம்: வீரசிங்கம் மண்டபம்,யாழ்ப்பாணம்.
(திருமறைக் கலாமன்றம் தொடர்பாக பல்வேறு தலைப்புக்களிலும் ஆய்வுரைகள் இடம் பெறும்)
நேரம்: மாலை 7.30 மணி முதல்.
இடம்: மன்ற அரங்கு பிரதான வீதி யாழ்ப்பாணம்.

**கலை நிகழ்ச்சிகள்**

கொழும்பு,திருகோணமலை,வவுனியா,இளவாலை,பாணந்துறை,மன்னார்.புத்தளம்,வன்னி,ஹப்புத்தளை,மட்டக்களப்பு யாழ்ப்பாணம்.திருமறைக் கலா மன்றங்கள் வழங்கும்
பல் வேறு சிறப்புக் கலை நிகழ்வுகள்

238.பிரதான வீதி.
யாழ்ப்பாணம். திருமறைக் கலாமன்றம்.
(C/6128)



ec ENGINEERING COUNCIL UK (CEI)
MATERIALS THEORY CLASSES

CERTIFICATE EXAMINATION (PART 1) MAY 2004
WEDNESDAYS AT 6.00 PM
COMMENCING ON 21/05/2003

GRADUATE DIPLOMA EXAMINATION (PART 2)
MAY 2004
TUESDAYS AT 6.00 PM
COMMENCING ON 20/05/2003

69,W.A.SILVA MAWATHA
WELLAWATTE
CONTACT SIVA- 0776035651
(C/6122)



2வது
உலக இந்து மாநாட்டு
சிறப்பு நிகழ்வாக
பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம்
நடாத்தும்
தமிழ் நாட்டில் இருந்து வருகை தந்துள்ள பேச்சாளர்களான
'சுந்தரேசன்' மற்றும் 'மதன்'
அவர்களின் ஆன்மீக சொற்பொழிவு
தலைப்பு: வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்கு
இடம்: கம்பன் கோட்டம் நல்லூர்.
காலம்: இன்று(14.05.2003) புதன் கிழமை மாலை 5.30 மணி
இராஜயோக தியான கண்காட்சி பி.ப.2மணி ஆரம்பமாகும்

அனைவரையும் அன்புடன் அழைகின்றோம்

பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம்

முக்கிய குறிப்பு:-
நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதீன கலா மண்டபத்தில் நடைபெற இருந்த மேற்படி நிகழ்வானது நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடை பெறும் என்பதை அனைவருக்கும் அறியத் தருகிறோம்.
(C/6133)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.05.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.